கல்வி திட்டப் போராட்டம்

மு. நமசிவாயம்

புத்தகப் பூங்கா
சென்னை-1

முதற் பதிப்பு: 1953 ஜூலை

உரிமை உடையது

விலை 0—8—0

விற்பனை உரிமை:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

பவனி வருகிறது

★

எரிமலை வெடிக்கும் நேரம், புயல் வீசும் வேளை, வெள்ளம் புரண்டோடி வரும் சமயம், கடல் கொந்தளிக்கும் காலம். இந்த மிக நெருக்கடியான வேளையில் உருப்படியான வேலை செய்ய இன்று **கல்வி திட்டப் போராட்டம்** என்னும் இந்த நூல் திராவிடத்தில் பவனி வருகிறது.

பார்த்தும் படித்தும் உண்மைகளை உணருங்கள், இந்த அரிய நூலை மிக்க விரைவில் எழுதி உதவிய இந்நூலாசிரியர் **மு. நமசிவாயம்** அவர்களுக்கு எங்கள் நன்றி!

வணக்கம்

வெளியிடுவோர்

அரிய நூல்! திராவிடர் ஒவ்வொருவர்

கரத்திலும் மிளிர வேண்டிய

ஒப்பற்றக் காவியம்!

டால்மியாபுரப் போராட்டம்

விலை அணா 0—8—0

வடநாடு தென்னாடு

என்னும் பேதப் பிரிவினையின்

அவசியத்தை விளக்கும் அறிவுக் களஞ்சியம்!

கல்விதிட்டப் போராட்டம்!

—o—

முரசு முழங்கிவிட்டது! போராார்வம் பொங்கி வழிந்து வருகிறது! கட்டுங்கடங்காத மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது! காராக் கிரகங்களை நிரப்ப மக்கள் அணி அணியாகக் குவிந்தவண்ணமிருக்கிறனர், சிங்காரச் சென்னையிலே சிறை புகுந்தனர் சிங்கத் தமிழர்கள், தமது சிறுவர்களின் நல்லறிவுக்குத் தடைக் கல்லாக விளங்கிடும் ஆணவ ஆச்சாரியாரின் அர்த்த மற்ற, அறிவகற்றும் ஆரியகுலதர்மக் கல்வி திட்டத்தை யெதிர்த்து!

அறப்போர் தொடங்கி விட்டது! ஆச்சாரிமாரின் ஆர்ப்பாட்டமும் அதற்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது!

அறப்போர் தொடுப்போம், அழிப்போம், ஒழிப் போம் ஆரியகுல தர்மக் கல்வி திட்டத்தை எதிர்த்து என எக்காளமிட்டு எதிர்ப்பு கிளப்புவோம் என் று தமிழர் பெரும்படை, தன்மானத் தீரர் முகாம் முர சறைந்து விட்டது.

தாய்க்குலம் போர்க்கொடியேந்தி விட்டது, தகாத குலக் கல்வியின் கேட்டைப் போக்கி, தாயகத்தைக் காத்திட!

தமிழர்கள்—திராவிடர்கள் திரண்டெழுந்து விட் டனர், வக்கிரபுத்தி கொண்டு, வழியற்றவழியிலே முதல்

வரான ஆச்சாரியாரியின் முறையற்ற, முற்போக்கு மற்ற, மூடத்தனத்தை வளர்த்திடும் முப்புரி நூலாரின் வர்ணாஸ்ரம வலையைக் கிழித்தெறிந்திட !

ஆம், தோழர்களே! ஆம்! ஆரிய தர்மம் தலை விரித்தாட, திராவிடன் தனது குலத் தொழிலைச் செய்து, குலதர்மப்படி நடந்து, குற்றேவல் செய்தே வாழ்ந்திட வழி வகுத்திடும் நயவஞ்சக நரித்திட்டத்தை —புதிய கல்வி திட்டத்தைப் புகுத்திய ஆச்சாரியாரின் போக்கைத் தாயகம் தடுத்து நிறுத்திடத் துடித்தெழுந்து விட்டது !

தன்மான இரத்தம், தமிழரிடையே உறைந்து விட்டது எனத் தப்புக் கணக்கிட்டு, தன்னினம் வாழ வேண்டும், தன் குலத்தார் திருக்குலத்தாராகவே திகழ வேண்டும் என்ற பேராசையால், தன்னை வசிஷ்டர்—வியாசர்—பாராசர் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு தகாத திட்டத்தைத் தமிழரது இளம் உள்ளங்களிலே புகுத்தி—திணித்து தகாத வேலையிலே ஈடுபட்ட ஆச்சாரியாரின் ஆகாத போக்கை—தகாத வேலையை, தற்குறித்தனத்தைப் பெருக்கி, குலத்தன்மையைப் பெருக்கிடும் பெருங்கேட்டை, பயங்கரப் பொறியை—குலக் கல்வி திட்டத்தை 'நான் நினைத்தேன்-புகுத்துகிறேன் —நடை முறைக்குக் கொண்டு வந்தேதீருவேன்', எனக் கொக்கரிக்கும் ஆச்சாரியாரின் கோணல் புத்தியை—குள்ளநரிச் சாகசத்தைத் தமிழர்கள் தட்டிக்கேட்டிடக் கூடி விட்டனர் !

தமிழினம்—திராவிட மக்கள் பன்னெடுங்காலமாக மனு, மாந்தாதா வகுத்த குலமுறைக்குக் குனிந்து கொடுத்து, படியாதவர்களாய், பாமரராய், பகுத்தறி

வற்றவர்களாய் வாழ்ந்தது போதும், இனி விழிப்போம், படிப்போம், அறிவுக்கண் பெறுவோம், அகில உலக முன்னேற்றத்தோடு, முறைகளோடு, காலவேகத்தோடு ஒட்டி வாழ்வோம், வாழ்விப்போம் என்ற விழிப்பு, எழுச்சி—முயற்சி, முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையிலே, ஆச்சாரியார் மீண்டும் மனு, மாந்தாதா முறையை மூடு மந்திரமாக, 'முக்காடிட்டு, கோல் கொண்ட கோமானக எப்படியோ தற்போது நாட்டிலே நடமாடிட ஓர் வாய்ப்பு கிடைத்து விட்டதென்ற ஒரே காரணத்தால் தமது இச்சைப்படி — எதேச்சாதிகாரமாகப் புகுத்தி தமிழரது தன்மான உணர்வைத் தட்டியெழுப்பி ஆரிய தர்மத்திற்கு அறை கூவல்விடச் சொல்லி விட்டார்!

அறைகூவல்! அறைகூவல் விடுகிறார் ஆச்சாரியார், ஆண்மை நிறைந்த சிங்கத் தமிழர்கட்கு — தமிழரது தன் மானப் பண்பாட்டிற்கு!

கொல்லை வழியே—தேர்தலுக்கு நிற்காமல், மக்களின் ஓட்டுரிமையைப் பெற்று வெற்றி பெறுமல், ஒரு கட்சியைச் சர்ர்ந்த ஆச்சாரியார், அக் கட்சியின் சட்ட சபைக் கட்சித் தலைவனுக நிச்சயம் தேர்ந்தெடுக்கப் படும் சூழ்நிலையில், வட நாட்டுக் கவர்னரால், மேல் சபையில் அங்கம் வகிக்கும் வாய்ப்பு பெற்றார்.

கடந்த ஓராண்டு காலமாக அவரது குறுக்குச்சால் ஓட்டம்—ஜனநாயகப் பண்ணையிலே, தர்பார் நடத்தி வந்திருக்கிறது.

எதையெதையோ செய்தார்—செய்து வருகிறார்! ஆச்சாரியார்.

கம்யூனிஸ்டுகள் முதல் நம்பர் விரோதி என்ருர், சட்டசபையிலே, சர்க்கார் திட்டங்கள் பலவற்றிலே மனம் போனபடி யெல்லாம் மாற்றங்கள் செய்து வந்தார். உணவுப் பங்கீட்டை எடுத்துவிட்டார். ஏங்கித் தவித்திடும் மக்களின் குரலைக் கேளாக் காதராகி விட்டார்.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது ஆரம்பக் கல்வி முறையைத் தலைகீழாக மாற்றியமைத்து, நடைமுறைக்கும் கொண்டு வந்து விட்டிருக்கிருர்.

ஆரம்பக் கல்வி—ஒரு நாட்டின் உயிர்நாடி, முதுகெலும்புமாகும்.

மக்களாய்ப் பிறந்த எவருக்கும் எழுத்தறிவிப்பது ஆரம்பக் கல்வியாகும்.

ஆரம்பக் கல்வி — இளம் உள்ளங்களை அறிவுத் துறையிலே பண்படுத்தி உருவாக்கச் செய்திடும் ஆரம்ப முயற்சி—முதல் கட்டம்.

ஆரம்பக் கல்வி பயிலும் மக்களின் வயது ஐந்திலிருந்து பதின்மூன்று வயது வரையாகும்.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது நமது நாட்டு முதுமொழி!

ஐந்து வயதிலே ஒரு மகனையோ, மகளையோ, பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்கப் பெற்ருேர் எடுத்துக் கொள்ளும் பங்கு, பாடு — முயற்சி மிகப் பெரிது.

ஐந்து வயதுக் குழந்தையை பள்ளிக்குச் செல்லும் பண்பு கொள்ளச் செய்து, பள்ளியிலே அமைதியாக

உட்கார்ந்து, ஆசிரியர்களின் போதனையைக் கேட்டு எழுத, படிக்கத் தெரிந்து மேலும் படித்து முன்னேறச் செய்வதென்பது மிகவும் கடினமான காரியமாகும்.

ஆரம்பக் கல்வி—கல்வி திட்டத்தின் அடிப்படை, ஆரம்பம் என்பது யாவரும் அறிந்ததே!

ஆரம்பக் கல்வி முறையின் திறத்தை, நல்ல முறையை ஒட்டி மக்களது எண்ணமும், எழுத்தும், பண்பும், பழக்க வழக்கமும் வளரும், வளர முடியும்.

கல்வியின் தலைவாயிலில் நுழையும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தடைக் கற்கள் பலவற்றைத் தாண்டிச் செல்லும் தாங்க முடியாத பாரத்தைச் சுமத்துகிறார், ஆச்சாரியார், தமது புதிய கல்வித் திட்டத்தின் மூலம்.

முதன் முதலில் கல்விகற்க முயற்சிக்கும் சின்னஞ் சிறு குழந்தைகளை முதுகெலும்பு முறிய மூட்டை தூக்குவது போன்ற—முடியாத முட்டுக் கட்டைகளைப் போடுகிறார்!

ஆச்சாரியார் ஆரம்பக் கல்வி முறையைத் திருத்து கிறேன் என்று கூறிக் கொண்டு, அதனை தலை கீழாக மாற்றி யமைக்கிறார்.

அதன்படி குழந்தைகள்—ஆரம்பக் கல்விகற்கப் பள்ளி புகும் குழந்தைகள் ஒருநாளில் மூன்று மணி நேரம் மட்டுமே—காலை அல்லது மாலை என்று ஏதாவது ஒரே ஒருவேளை மட்டுமே பள்ளிக்கு வந்து படிப்பு கற்க வசதி உண்டு.

காலையில் பள்ளி வரும் குழந்தைகட்கு மாலை பள்ளி கிடையாது. மாலையில் பள்ளி வரும் குழந்தைகட்குக் காலையில் பள்ளி கிடையாது.

பள்ளிக்கு வராத ஒருவேளையில் குழந்தைகள்— பள்ளி மாணவர்கள், தத்தமது குலத் தொழிலைச் செய்ய வேண்டும்.

ஒருவேளை படிப்பு—மறுவேளை உழைப்பு—அதுவும் குலத் தொழிலில்! இது ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம்!

மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக, ஏட்டுச் சுரைகளாக, எழுத்தறிவு மட்டுமே பெற்றவர்களாக இருத்தல் கூடாது—தொழிலறிவும் பெற்றவர்ர்ளாக விளங்கவேண்டும்- தொழிற் கல்வியும் மாணவகளுக்கு ஊட்டப்படவேண்டும்.

ஆமாம்! ஏட்டுப் படிப்புடன்—தொழிற்கல்வியும் வளரவேண்டும், வேண்டாம் என்று யாரும் கூறவில்லை; கூறவும் மாட்டார்கள்.

மாணவர்களுக்குத் தொழிற் கல்வியையும் கற்றுத் தரவேண்டியது முக்கியம்தான்—அவசியம்தான்.

ஆனல் எந்த வயதுள்ள மாணவர்களுக்கு? எந்தக் கட்டத்தில்? எந்த நிலையில்? என்பதை நன்கு கவனித்துக் காரியமாற்ற வேண்டியது, மக்களின் நல்வாழ்விலும்—வளர்ச்சியிலும் நாட்டம் கொண்டோர் நிச்சயம் அக்கரை காட்டித் தீரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இதுதான் இப்போது தமிழகமெங்கும் எழுந்துள்ள முக்கிய—முதன்மையான பிரச்சினை!

ஆளவந்த ஆச்சாரியார்—ஒருநாள் நினைத்தார்—சட்டமியற்றிவிட்டார், ஆரம்பக் கல்வித் திட்டத்தை மாற்றி!

இதன்படி கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குத் தொழிற் கல்வியைக் கற்றுத் தரவேண்டும்—அதற்கான வாய்ப்பு தருகிறோம்—வழி காட்டுகிறோம் என்று கூறிக்கொண்டு—ஒருநாளில் மூன்று மணி நேரம் கல்வி—மூன்று மணி நேரம் தொழில்—அதாவது அவர் அவரது குலத்தொழில் செய்து பழகிட வாய்ப்புத் தருவதற்காக விடுமுறை என்று தீர்மானித்து ஜூன் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு, கட்டுப்பட்டு அதன்படி கல்வி கற்றுத் தீரவேண்டிய மாணவர்களது வயது, ஐந்து முதல் பதின்மூன்று வரை.

சின்னஞ் சிறுவர்கள்! சிட்டுகள்போல், கவலை யற்று ஆடி, ஓடி விளையாடிடும் விளையாட்டு வயது— குழந்தைப் பருவம்.

உலகம் தெரியாத குழந்தைகள் அவர்கள்—பாரத் தைத் தாங்கும் உடல் வலிவோ, கடினமான கருத்துக் களைப் புரிந்துகொள்ளும் உள்ளத்தெளிவோ அற்றவர் கள்—அறியாதவர்கள், அப்பாவிகள்—ஐந்து வயதுப் பிள்ளைப் பருவத்தினர்.

பாடுபட்டு, தொழில் எதையும் செய்யக்கூடிய அளவுக்குப் பலம்—அதைவிட பக்குவம் பெறாத உடல் உரமற்ற—நாடியிலே முறுக்கேறாத பச்சிளங் குழந்தை கள் — முதிர்ச்சிபெற்று முற்றாத பிஞ்சுகள்! மலராத மொட்டுகள்! தழைத்துச் செழித்து வளராத சின்னஞ் சிறுதழைகள்—துளிர்கள்! வளரும் பயிரின் சிறுசிறு

மூளைகள் — மூளைகள்! பாய்ந்தோடும் பேரருவியின் சிறுசிறு ஊற்றுக்கள்.

எத்தனையெத்தனையோ குழந்தைகளை விளையாட்டுப் புத்தியிலிருந்து மாற்றி—பள்ளி செல்லும் பழக்கத்தை ஊட்டிட முனைவதே மிகவும் கடினமான செயலாக இருப்பதைப் பெற்றோர்கள் நன்கு அறிவர்.

பள்ளியையும், பள்ளியில் சூழ்ந்துள்ள மற்ற மாணவர்களையும், அதைவிட ஆசிரியரையும் கண்டு மிரளும் குழந்தைகள் பல!

பெற்றோரை விட்டு, விளையாடும் வீட்டை விட்டு தனியே பள்ளியில் பணிவோடு அமர்ந்து, அதிலே ஒரு பழக்கம் ஏற்பட்டு, அதனால் படிப்பிலே சுவை கண்டு, படிப்பிலே நாட்டம் செலுத்திடும் அளவுக்குக் குழந்தை மனதைப் பக்குவப்படுத்தும் பொறுப்பு சர்வ சாதாரணமாக எல்லாக் குழந்தைகளிடத்திலும் சுலபத்தில் ஏற்படக்கூடியதல்ல — சுலபமாக ஏற்படுத்தக் கூடியதுமல்ல!

பல நாள், பலப்பல விதங்களிலே குழந்தை மனத்திற்குச் சமாதானம் கூறி, அதன் சந்தேகங்களைப் போக்கி, சுவையான வழிகளிலே அதன் மனதை மாற்றிக் கல்வித் துறையிலே அதன் மனதைப் பொருத்துவது என்ற முயற்சியில் பெற்றோரும், பள்ளி ஆசிரியர்களும் படாத பாடு படுகிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும்.

சாதாரண புத்தகக் கல்வியைக் கற்பதற்கே, சின்னஞ் சிறுவர்களால் சுலபத்தில் முடியவில்லை— முடிவதில்லை. அத்தகைய இளம் உள்ளமும், இளைய

உடலும் படைத்தவர்கள் — அந்தக் குழந்தைகள்— ஆரம்பக்கல்வி கற்கும் மாணவர்கள்.

இந்த நிலையை — உண்மை நிலையை, நன்ருக உணர்ந்த காரணத்தால்தான், இந்த இருபதாம் நூற்ருண்டு காலத்தில் தோன்றிய கல்வித்துறை வித்தகர்கள் வல்லுநர்கள் பலரும்— தானே கற்றல்—படம் பார்த்துப் படித்தல்—விளையாட்டின் மூலம் கற்றல்— கற்பிக்கக் கற்றல்—கனிவுடன் கற்பித்தல் என்ற பலப் பல நல்ல, சுலப, சுவையுமான முறைகளிலே, குழந்தைகளைக் கவரும் வழிகளின் மூலம்—முறைகளின் மூலம், குழந்தைகளுக்குக் கல்விக் கற்றுத் தரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிருர்கள்.

குழந்தைகளைக் கடினமாகக்கண்டிப்பதும் - மிரட்டி உருட்டுவதும் — அடித்து விரட்டிப் பயமுறுத்துவதும் கல்வித் துறையிலே, அதிலும் மிக மிக முக்கியமாக, ஆரம்பக் கல்வி முறையில் அறவே கூடாது என்று வலியுறுத்தி வருகிருர்கள்.

சின்னஞ் சிறு பிஞ்சுகள்—தளிர்கள், துளிர்கள் எனத் தக்க குழந்தைகளைக் கடின வேலைகள் செய்யும் படி வற்புறுத்துவது மனிதப் பண்பிற்கே முரணனது - முறையற்றது என்பது மட்டுமல்ல அது ஆகாது— கூடாது—தகாது—பெருங் குற்றமுமாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டுதான் உலகம் முழுவதும், பதினன்கு வயதிற் குட்பட்ட குழந்தைகளை எந்த விதமான தொழில் முதலாளியும்—தொழிற்சாலைகளும் தங்களது தொழிற்சாலைகளிலும் சரி—அலுவலகங்களிலும் சரி வேலைக்கு அமர்த்திக் கொள்ளக் கூடாது எனச் சட்டமியற்றி யிருக்கின்றனர்.

தொழிற்சாலைச் சட்டம் (Factory Act) என்ற சட்டத்தின் கீழ் குழந்தைகளை வேலைக் கமர்த்துவது, வேலை வாங்குவது தடுக்கப்படுகிறது—குற்றமெனவும் கருதப்படுகிறது.

இந்த சாதாரண மனப் பண்பின்படி பார்த்தால், ஆச்சாரியாரின், ஆரம்பக் கல்வியின் சீர்திருத்தம் என்கிற பெயரின் கீழ் பதினுன்கு வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தினந் தினம், ஒருவேளை முழுதும் குலத் தொழில் செய்து பழகிடச் சொல்வது தவது—தவறு—தகாது—கூடாது என்பது தெளிவாகிறது.

தொழில் புரிவது இழிவல்ல என்ற எண்ணம் மேலோங்கி நாட்டின் வருங்கால சந்ததிகள் தொழிலுணர்ச்சி பெறுவது நல்லது என்ற நல்லெண்ணத்துடன் செய்யப்படும் காரியமாகக் கல்வித் திட்டத்தைப் பயன் படுத்த ஆச்சாரியார் விரும்பினுல், இத் திட்டத்தை ஆரம்பக் கல்வி கற்கும் இளம் குழந்தைகள் மீது சுமத்தாமல் உயர் வகுப்பு மாணவரிடையிலும் அதைவிடக் கல்லூரி மாணவர்களிடையிலும் புகுத்துவது நல்ல தாகும்.

ஆச்சாரியார் இதனை அறியாதவரா? அறிந்தவர் தான். அறிந்தும் இதனை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்? ஏன்? எதற்காக?

இத்திட்டத்தைக் கண்டித்து ஒரு கட்சிக்காரர் மட்டுமேதான் எதிர்க்கிருர்கள் என்று குறைகூறமுடியாது!

இதனைக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் குறை கூறுகிருர். மாஜி மந்திரி சுப்பராமன் செல்லாத திட்டம்

என்கிறார். மேயர் செங்கல்வராயன் 'ஜாதிமத்தை நிலை நிறுத்தும், என்று கூறுகிறார்.

உத்தமர் ஓமந்தூரார் கண்டிக்கிறார். ஒரே ஒரு தாலுக்காவில் மட்டுமாவது புகுத்தி அதன் விளைவு களைக் கவனித்துப் பார்த்து பின்னர் முழு அளவில் கவனிப்பது தான் நல்லது என்கிறார்.

காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள், கண்டித்து வருகின்றனர். காங்கிரஸ்காரர்கள் பலர் வெளிப்படை யாகத் தமது கண்டனத்தைத் தெரிவித்துவிட்டனர்.

காங்கிரஸ்காரர்களைத் தலைவராகக் கொண்ட செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றம் இதனைக் கண் டித் திருக்கிறது!

அது மட்டுமல்ல, நாடெங்கு மிருந்து பலபல மாவட்ட ஆட்சி மன்றங்கள், பஞ்சாயத்துகள், கல்வி ஆசிரியர் மாநாடுகள் யாவும் இதனைக் கண்டித்து இருக் கின்றனர்.

கம்யூனிஸ்டுகள், திராவிடர் இயக்கம் யாவும் இதன் கேடுகளை விளக்கத் தவறவில்லை.

என்ன ஏற்பட்டு என்ன? ஆச்சாரியார் தமது போக்கை மாற்றத் துணியவில்லை. மாறாக மேலும் தமது புதிய திட்டத்தை பல இடங்களுக்கும் விரிவு படுத்தினார்!

சட்டசபையைக் கலந்தாரில்லை; சகமந்திரிகளைக் கேட்டாரில்லை; கல்விநிபுணர்களைக் கலந்தாலோசிக்கக் காணோம். கல்வி அதிகாரிகள்—கற்றோர்—பெற்றோர்—ஆசிரியர்கள் — அதைவிட தாம் ஆளும் மக்களின் மகத்தான மனக்கொதிப்பையும் சட்டை செய்தாரில்லை.

'தாம் இட்டதே சட்டம், கொண்டதே கோலம்' என்று தான்தோன்றித்தனமாகத் தாண்டவமாடுகிறார், தவக்கோலம் பூண்டவர் எனக் கல்கியாரால் காட்டப் படும் கனம் ஆச்சாரியார் அவர்கள்.

கனம் ஆச்சாரியார், மழலைகளின்மீது மண்மூட்டையைச் சுமத்துகிறார்—மாடு மேய்க்கச் சொல்லுகிறார்—துணி வெளுக்கப் போங்கள்—மண்பாண்டம் செய்யுங்கள்—மரம் வெட்டுங்கள்—மடைகட்டி நீர் பாய்ச்சுங்கள் என்ற விதத்திலே குலத்தொழில் புரியச் சொல்கிறார்.

நல்ல மாறுதல் ஏற்படுமாம், இக்கல்வித் திட்டத்தால், சமுதாயத்திலே! வேலையற்றுத் தவிக்கும் நிலைமை வளராதாம் இதனால்!

இப்படியெல்லாம் காரணம் கூறப்படுகிறது, இத் திட்டத்திற்கு, ஆச்சாரியாரின் அடிவருடிகளால்!

எத்திசை திரும்பினாலும் எதிர்ப்பு—எங்கு நோக்கினும் கண்டனக் கூட்டங்கள் — எதைக் கண்டாலும் அங்கெல்லாம் இதே பேச்சு என்ற விதமாக இன்று தமிழ்நாடு முழுவதும் இதே பிரச்சினை பெருகி வளர்ந்து விட்டிருக்கிறது.

இவ்வளவு கண்டிப்பும், கண்டனங்களும், எதிர்ப்புகளும் ஏராளமாக ஏற்பட்டும் 'எதற்கும் செவி சாய்க்கேன், எவர் சொல்லையும் கேளேன்' என்று ஆச்சாரியார் தமது அதிகார போதையின் வழியே தமது நினைப்பை—விருப்பத்தை—வெற்றிகரமாக்க எதையும் செய்யத் தயாராகிவிட் டிருக்கிறார்.

இத்திட்டம் உருவானது எப்படி? யாரால்? என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

சென்னை அரசாங்கத்தின் முதன் மந்திரியாக விளங்கி வரும் கனம் இராசகோபால ஆச்சாரியார், ஒருவரது எண்ணம்—திட்டம் — தீர்மானம் — இன்று அவரால் சட்டமாக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்துள்ளது.

இத்திட்டம் எந்தக் கட்சியின், குறிப்பாக ஆளும் கட்சியான காங்கிரசின் கொள்கையுமல்ல! இது ஆச்சாரியாரின்—தனிமனிதர் ஆச்சாரியாரின் அபிலாஷை—விருப்பமாகும்.

ஒரு தனி மனிதர்—தமது விருப்பம் என்ற ஒரே காரணத்திற்காக—ஜனநாயகம் வளர்ந்துள்ள இந்தக் காலத்திலேமக்களின் ஒருமிக்கஎதிர்ப்பைத் தரக்கூடிய ஒரு திட்டத்தை தன்னிச்சைப்படி புகுத்துவதென்பது மிகமிக சர்வாதிகாரமான செயலாகத்தானே கருதப்படும்?

பெரும்பாலான, ஏன், இந்த நாட்டின் எல்லாக் குழந்தைகளையும் பாதிக்கும் திட்டத்தை எடுத்த எடுப்பிலே, 'என்னிஷ்டம்' என்று கூறிச் சட்டமாக்கிடும் சர்வாதிகாரப் போக்கு எதைக் குறிக்கிறது?

ஆச்சாரியார் இத்திட்டத்தில் தமது எண்ணம் முழுவதையும் செலுத்தி வருகிறார். தமது பேச்சு, மூச்சு, போக்கு அத்தனையையும் இதற்காக ஆதரவு தேடுவதிலும், எதிர்ப்பாளரைக் கேலி கிண்டல் செய்வதிலும், எப்படியாவது இதனை எத்தகைய எதிர்ப்பையும் துச்சமாகக் கருதித் திணித்து வெற்றிகாண வெறி, போதை கொண்டு வெறித் தாண்டவமாடுகிறார் — போதை மொழிகளை உதிர்க்கிறார்!

அவருக்கு ஏன் இதிலே இவ்வளவு அக்கரை—பிடிவாதம்—வெறி—போதை எல்லாம்?

'பிறர் சொல்வதைக் கேளேன்' என்று யார் கூறுவது? நாட்டை ஆளும் அரசாங்கத்தின் முதல்வர் கூறலாமா? நல்லதா? மக்களை மதிப்பதாகுமா?

இத்தகைய எதேச்சாதிகாரப் போக்கு எங்கே கொண்டுபோய் விடும்—என்னென்ன நிலைமைகளை உண்டாக்கிவிடும் — இப்படியெல்லாம் மனம்போன போக்கிலே — தன்னிச்சைப்படி நடந்த மன்னாதி மன்னர்களின் கதியெல்லாம் என்ன ஆயிற்று என்பதை யெல்லாம் நாம் எடுத்துக்கூறியா ஆச்சாரியார் தெரிந்துகொள்ள வேண்டும்?

அவரோ, மேதை என்றும், மகான் என்றும், இருபதாம் நூற்றாண்டின் சாணக்கியன் என்றும் எப்படி யெப்படியோ, அவரது பக்த கோடிகளால் போற்றப்பட்டு வருகிற அவருக்கா ஆணவம் பிடித்த ஆட்சியின் கதி என்ன ஆகும், என்னென்ன ஆகியிருக்கிறது என்பதை அறிய முடியாது?

அவர் அறிவார் — அறிந்தும் இத்தகைய தீய முயற்சியில் தீந்தமிழ்ச் செல்வங்களைத் தீய்த்திடும் கொள்ளிவாய்ப் பிசாசாக மாறியிருக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்கும்போது உண்மையிலேயே சிலருக்கு குழப்பமேற்பட்டுவிடக்கூடும்.

ஆச்சாரியார் யார்? — அவர் எப்படிப்பட்டவர்—எத்தகைய மனோபாவம் படைத்தவர்—என்னென்ன கருத்துக்களை நாட்டுக்குக் கூறிவந்திருக்கிறார் — எதை விரும்புகிறார் - எதற்காகப் பாடுபடுகிறார் என்று அவரது

முன்னுள்போக்கையும்,பேச்சையும் கூர்ந்துகவனித்தால் ஆச்சாரியாரின் உள் எண்ணம் விளங்கும். இக்கல்வித் திட்டத்தின் பயனுல் ஏற்படக் கூடிய விளைவுகளால் சமுதாயத்திலே ஏற்படக்கூடிய தலைகீழ் மாறுதல்கள் பற்றிய பயங்கர நிகழ்ச்சிகள் நம் மனக் கண் முன்னர் தோன்றுகின்றனவே !

குலத்தொழில் செய்ய வாய்ப்பு கொடுக்கப்படுகிற தாம் குறிப்பிட்ட குலத்தொழில் இல்லாதவர்கள், வண்ணார்—தச்சர்—கருமார்—நாவிதர்—குயவர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டு அத்தொழிலை பழக்கும்படி செய்யப் படுமாம்.

'வேடிக்கையான வேலை இது! வீணை திட்டமிது! என்று கூறுவோருக்கு இதைவிட விசித்திரமான பதில் ஆச்சாரியாரால் அனுமார் என்று வர்ணிக்கப் பட்ட நிதியமைச்சர் கனம் சுப்ரமண்யம் அவர்களின் திருவாய் மொழியாக உதிர்ந்திருக்கின்றது

"படித்துவிட்டு வேலை கிடைக்காத காரணத்தால், படித்து வேலையற்றுக் கிடக்கும் அனைவரும் கம்யூனிஸ்டு களாக மாறி விடுகிறார்கள். இப்புதிய கல்வித் திட்டப் படி மாணவர் படித்தால் கம்யூனிசம் வளராது" என்ற கருத்துப்பட சுப்பிரமண்யம் அவர்கள் பேசி யிருக்கிறார்கள்.

'கம்யூனிசம்' என்ற சொல்லைக் கண்டு ஏன்தான் இவர்களெல்லாம் வீணே மருள்கிறார்களோ தெரிய வில்லை.

'கம்யூனிசம்' என்ற கொள்கையைக் கண்டிப்பது மிகவும் தவறு. கம்யூனிசக் கொள்கை யென்பது, மக்

கள் அனைவருக்கும் வேலையும்; வேண்டிய வசதியும் செய்து தரும் கொள்கைதானே ?

கம்யூனிஸ்டுகள் என்று கூறிக்கொள்ளும் கட்சியினரைப் பிடிக்கவில்லையானல், அதற்காக கம்யூனிசக் கொள்கையே தவறு என்பதும், அதைத் தடுப்பதற்காக எதிர்கால சந்ததிகளைச் சேற்றிலும், சகதியிலும் தள்ளுவதும், இருட்டுக் குகையிலே தள்ளப்பட்ட குருட்டுக் கண் படைத்தவரைப்போல, அறிவுக்கண்ணற்று அறியாமையோடு அறிவுலகத்தில் நடமாடும் அடிமைகளாக மாணவர்களை வளர்ப்பதா? முறைதானு? என்று மக்கள் ஏன் கேட்க மாட்டார்கள் ?

ஆட்சி நடத்தும் ஒரு சிலரின் விருப்பு வெறுப்புக்கு, ஏற்றபடி எதிர்கால சந்ததிகளின் ஏற்றத்தைப் பற்றி எதையும் சிந்தியாது எதை வேண்டுமானுலும் செய்வது நீதியல்ல—நேர்மையல்ல—நாகரிக சர்க்காரின் நாணயமான போக்குமல்ல! என்பதை நினைவூட்ட வேண்டிய கட்டத்திற்கு விரைந்து கொண்டே இருக்கிறார்கள் என்பதைத்தானே அவர்களது பேச்சு தெரிவிக்கிறது! வேறென்ன ?

ஆச்சாரியாரின் பிடிவாதமான போக்கின்படி நுழைக்கப்பட்ட இத்திட்டம் மக்களுக்கு நன்மை பயக்காது என்று மக்கள் கூறினுலும், அதனை ஒருசிறிதும் மதியாது ஆச்சாரியார் இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவானேன் ?

இதிலேதான் ஆச்சாரியாரின் திறமை — திரையிட்டுக் குலதர்மத்தை நிலைநாட்டும் நயவஞ்சக நரித்திட்டம் அடங்கியிருக்கிறது.

அவரவர் குலத் தொழிலைச் செய்து பழகுங்கள். அதற்காக பாதிநாள் பள்ளிக்கூடம் கிடையாது என்று கூறும் ஆச்சாரியாரின் எண்ணம் என்ன?

ஏன் கூறுகிறார் குலத்தொழில் என்று? எதற்காகக் குறிப்பிடுகிறார் குலத் தொழில் செய்யவேண்டுமென்று!

ஒரு குறிப்பிட்ட குலத்தில் பிறந்தவன் — அந்த குலத்தில்—ஜாதியில் பிறந்த காரணத்தால் — அதற்கென்று உள்ள, மனு மாந்தாதா காலத்தில் ஏற்பட்டதென்று வகுத்துள்ள ஜாதித் தொழில்களையே செய்து வரவேண்டும். ஜாதி ஆச்சாரம் கெடக்கூடாது. குல தர்மம் குலையக் கூடாது. என்பதல்லாமல் வேறு என்ன காரணம் கூற முடியும், இத்தகைய திட்டத்திற்கு.

பிள்ளைகளைப் பெரும் பகுதி பெற்றோர்கள், விளையாட்டுக் குணம் மாறி, பொறுப்புணர்ச்சி ஏற்படவேண்டும் என்ற காரணத்திற்காகவே பள்ளிக்கு அனுப்புகின்றனர்.

நிலைமை அப்படியிருக்க, பிள்ளைகள் பாதி நேரம் வீட்டுக்குத் திருப்பியனுப்பப் படுகிறார்கள் இத்திட்டப்படி, குலத்தொழில் செய்ய! நடக்குமா, இத்திட்டம் வெற்றிகரமாக? நடக்கவிடலாமா, நல்லறிவும், நாணயமும், பொது நோக்கும் கொண்ட பண்பினர்?

குலம் — ஜாதிபேதம் — இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டது என்பதை மக்கள் நன்கு உணர்ந்து —குலத்தை மறந்து—ஜாதி பேதங்களைக் கைவிட்டு, ஒன்றே குலம் என்ற உயர்ந்த கருத்துடையோராக வாழவேண்டும் என்ற பொது உரிமைத் தத்துவத்தை

நடைமுறைக்குக் கொண்டு வரப் பெரிதும் விரும்பி வருகின்றனர்.

மக்களது மனவளம் இந்த வகையிலே பண்பட்டு, பகுத்தறிவுத் துறையிலே முன்னேறி வருகின்ற காலத்திலேதான் குலத்தொழிற் கல்வி குலதர்மத்தை நிலைநிறுத்த நுழைக்கப்படுகிறது இங்கே—சட்ட மூலம், அதுவும் தனிநபரின், தனிப் பெரும் விருப்பத்தால்—தனிப் பெரும் அதிகாரத்தின் துணைகொண்டு.

வளர்ந்துவரும் பகுத்தறிவுக் கொள்கைகள், மலரும் மொட்டுகளின் மூலம் மேலும் மணம் பெறுது மொட்டிலேயே கருக்கிடச் செய்யும் சூது—சூதானபொறியல்லாது, தீங்கான திட்டமல்லாது வேறென்ன இத்திட்டம்?

சக்கிலியின் மகன் சக்கிலியாகவே வாழவேண்டும். அதற்கான பயிற்சி பெறவேண்டுமென்கிறார் ஆச்சாரியார் சிறு வயது முதற்கொண்டே! சரிதானா? தேவைதானா?

இதுபோலவே வண்ணார் மகன் துணி வெளுப்பதிலும், நாவிதர் மகன் சவரம் செய்வதிலும், கன்னார் மகன் கன்னார வேலையிலும், குயவர் மகன் மண் பிசைந்து பாண்டம் செய்வதிலும், தச்சர் மகன் மரம் செதுக்கி வேலை செய்வதிலும், கருமார் மகன் உலைக் கூடத்திலே உழல்வதிலுமாக தத்தமது குலாச்சாரமென்று, தான் பிறப்பதற்கு முன்பே தன்மேல் சுமத்தப்பட்ட, சமுதாய ஏற்பாட்டுக்கு வர்ணாஸ்ரம தர்மத்திற்கு குலத்தொழிலுக்குத் தலைவணங்கச் செய்யப் பழக்கப்பட வேண்டுமா?

ஜாதிபேதம் கூடாதுஎன்று பேசப்பட்டு, அதனைத் தூண்டுவது அநாகரிகம் என்று கருதப்பட்டு, அத்தகைய பழமைப் பிடியினின்றும் மக்களை விடுவிக்க அரும்பாடு பட்டுவரும் நல்லறிவாளர் நாடெங்கும் தோன்றி நற்பணியாற்றி வரும் நேரத்தில் இத்தகைய குறுக்கீடா? குலதர்மக் கல்வி திட்டமா? கூடாது—கூடாது—கூடவே கூடாது என்று கூவிடும் கோடிக் கணக்கான குரல்களை ஆச்சாரியார் கேலியாக நினைத்து விட்டார்!

இது மிகவும் தவறு என்பதுமட்டுமல்ல, ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைப்பதான படுபாதகச் செயல் என்பதைக் கூறாமலிருக்க முடியவில்லை!

இவ்வளவும் ஏன்? எதற்கு? விடாப்பிடித்தனம் எதை நிலைநாட்ட? என்பதெல்லாம் ஆச்சாரியாரின் திட்டத்திலே குறிப்பிடப்படும் குலத்தொழில் என்பதிலே தான் இருக்கிறது.

"இது வெறும் பள்ளிக்கூடம் சம்மந்தப்பட்ட விஷயம் அல்ல! பள்ளி ஆசிரியர்கள் சம்மந்தப்பட்ட விஷயம் மட்டும் அல்ல! இது எல்லா மக்களையும் பொறுத்த விஷயம்!!

மேலே இருப்பது கனம். ஆச்சாரியார் கூறுவது!

ஆம் இது மக்களைப் பொறுத்த. விஷயம்தான். இதனை மக்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மிக நன்றாக அலசி, ஆச்சாரியார் இத்திட்டம் கொண்டு வரும் நோக்கத்தை, சூழ்நிலையை மிகமிகத் தெளிவாக விளக்கியுள்ளதை நாட்டு மக்கள் முன்னர் எடுத்துக் காட்டுவது மிகவும் நல்லது—கடமையுமாகும்.

"பொது மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை இது" என்று ஆச்சாரியார், கூறியுள்ளதை, மிக மிகக் கூர்மையாகப் பொது மக்கள் கவனிக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். ஆச்சாரியார் கூறுவது முற்றிலும் உண்மை — புதிய ஆரம்பக் கல்வித் திட்டம், கல்வி சம்பந்தப்பட்டது அல்ல, ஆசிரியர்களைப் பற்றிய சாதாரணப் பிரச்சினை அல்ல, நிச்சயமாக, பொது மக்களைப் பற்றிய பிரச்சினை. சமூகப் பிரச்சினை நாட்டின் எதிர் காலத்தைப் பற்றிய பிரச்சினை!

நாட்டுக்கு என் திட்டம் வரப் பிரசாதம், என்கிறார் அவர், நாட்டையும் அவரையும், நாட்டைப் பற்றி அவர் கொண்டுள்ள கருத்தையும் நன்றாக அறிந்த நாம், புதிய கல்வித் திட்டத்தைப் பேராபத்து என்கிறோம்.

அவர், காரணம் காட்டக் கூட முன்வர மாட்டார், "கனம்"!!

நாம், இலேசாகத் தமது சுயமரியாதை உணர்ச்சியையும் அறிவுத் தெளிவையும் இழந்துவிடத் துணிபவர் தவிர, பிறர் எவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணம் காட்டித்தான், அவருடைய புதிய கல்வித் திட்டத்தை, பேராபத்து, நாட்டை, எதிர் காலத்தை நாசமாக்கும் நஞ்சு என்று எச்சரிக்கையுடன் கூறுகிறோம்.

புதிய கல்வித் திட்டம் என்ன? அதனை இவர் எக்காரணம் காட்டிப் புகுத்துகிறார், என்பதைக் கவனிக்கு முன்பு இந்தத் திட்டத்தைத் தீட்டும் இவர், யார்? இவருடைய நோக்கம் என்ன? என்பதைப் பொது மக்கள் அனைவரும், தி. மு. க. வில் இருப்பவர் மட்டுமல்ல, எந்தக் கட்சியில் உள்ளவர்களும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

ஏனெனில், பழத்தின் சுவைக்கு மரத்தின் தரமும் வகையும் ஒரு முக்கியமான காரணமல்லவா! அல்லிப் பூவிலே மல்லியின் மணம் கிடைக்குமா, ஆற்று மணலைக் கொண்டு ஆரம் தொடுக்க இயலுமா? எனவே தான், திட்டத்தைக் கவனிப்பதற்கு முன்பு, திட்டம் தரும் 'திவ்ய புருஷரை'ச் சற்றே கவனித்தாக வேண்டும் என்கிறோம்-அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை அல்ல நாம் அலசிப் பார்க்கச் சொல்வது, அரசியல் அநாகரிகமல்லவா அது — நாம், சமூகத்தைப் பற்றி, நாட்டைப் பற்றி, அவர் கொண்டுள்ள கருத்துக்கள் யாவை, அவர் எத்தகைய போக்குடையவர், என்ற பொது நிலையைத்தான் கவனிக்கச் சொல்கிறோம்.

எவரும் சந்தேகம் கொள்ள முடியாத நிலையில் ஆச்சாரியார் தமது எண்ணத்தைப் பன்முறை எடுத்து விளக்கி விட்டார்.

ஆச்சாரியார் ஓர் பழைமை விரும்பி — அதை அவரே பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறார் — பிறரையும் பழைமை விரும்பிகளாகும்படி உபதேசமும் புரிகிறார். அவருடைய முதல் ரேடியோ சொற்பொழிவில் என்று கருதுகிறோம், அவரே கூறினார், "நான் ரொம்பக் கர்நாடகப் பேர்வழி" என்று.

"நான் என்னத்தைக் கண்டேன் — சுத்த கர்நாடகம் நான்"—என்று பட்டி தொட்டிகளிலே பலர் பேசக் கேட்டிருப்பீர்கள்—அந்த முறையிலே அல்ல ஆச்சாரியார் கூறுவது—நான் உங்கள் முதலமைச்சர், உங்களைக் காக்கவும் கருக்கவும் ஆற்றல் கொண்ட பதவியில் இருப்பவன். நான் கவர்னராகக்கூட இருந்திருக்கிறேன், அது ஒரு பிரமாதமா, நான் கவர்னர் ஜெனரலாகவும்

இருந்தவன், அப்படிப்பட்ட நான் ஒரு கர்நாடகப் பேர் வழி!—என்கிருர். அதாவது, 'கபர்தார்! நான் யார் தெரியுமா?' என்று மிரட்டும் குரலில் பேசுகிருர்.

நாடு நன்ருக அறிந்து கொள்ளும் அளவுக்கு ஆச்சாரியார் தம்மை ஓர் பழமை விரும்பி என்பதைக் காட்டிக் கொண்டுவிட்டார்.

கடவுள் அருளைப் பெற வழியாது, என்ற பிரச்சனை முதற் கொண்டு கருப்புப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதால் கிடைக்கும் இனிமையின் அளவு யாது என்ற பிரச்சினை வரையிலே, பாலம் திறந்து வைக்கும் சமயமாயினும் பனை வெல்லம் காய்ச்சுவோர் மாநாட்டிலே பேசும் நேரமாயினும், கட்டுரை தீட்டினுலும் சிறு கதை தொடுத்தாலும், இசை மாநாடு ஆனுலும், அர்ச்சகர் மாநாடு ஆனுலும், எங்கும், எந்தப் பொருள் பற்றிய கருத்துரை கூறிடும் வாய்ப்பு கிடைத்தாலும், அவர் தம்மை ஓர் பழமை விரும்பி—வர்ணுஸ்ரமி—பார்ப்பனீய முறையிலே நீங்காத பற்றும் பாசமும் கொண்டவர், என்பதை, ஒளிவு, மறைவு இன்றித் தெரிவித்து விட்டிருக்கிருர்.

வர்ணுஸ்ரமத்தை வலியுறுத்தத் தவறுவதில்லை.—வாழ்க்கை முறை பழம் காலத்தது போலாக வேண்டும் என்று, வற்புறுத்தாது இருந்ததில்லை. எவர் ஏளனம் செய்வாரோ என்பது பற்றிய கவலையுமற்று, இதனை அவர் பேசி வந்திருக்கிருர்.

அனுமனைச் சதா தியானம் செய்யுங்கள், மனதிலுள்ள காம விகாரம் மறையும் என்று அயின் ஸ்டீனின் அதி அற்புத விஞ்ஞான நுணுக்கத்தையும், அல்பேனியா

வின் இன்றைய அரசியல் நிலையாது? என்று அறிந்து கொள்ளும் அளவுக்கு வரலாற்று விஷயத்தையும், மார்க்ஸையும் ஏங்கல்ஸையும் மனப்பாடம் செய்யும் கல்லூரி மாணவர் கூட்டத்திலேயே சொன்னவர் இந்த ஆச்சாரியார் என்றால், பஜனை பாண்டு ரங்கமும் ஏகாதசி விரதமிருக்கும் எல்லப்பனும், காவடி தூக்கும் கதிர்வேலும், சந்தன கைங்கரியம் செய்யும் சடையாண்டியும், 'மூண்டகக்கண்ணி' அம்மன் கோயிலுக்கு நாக்கு குத்திக் கொள்ளும் முனியனும், கூடிடும் நேரத்தில், ஆச்சாரியாரின் பழமைப் பிரசாரத்தின் வேகமும் ஆர்வப் பெருக்கும் இருக்கும் விதத்தை விளக்கவா வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிலேயே பலருக்கு அருவருப்பு கிளம்பக்கூடிய அளவுக்கு அவர் வர்ணாஸ்ரமத்தை—குலத்துக்கு ஒரு நீதி கற்பிக்கும் கொடிய முறையை—ஜாதிப் பாகுபாட்டின் மூலம், உயர்ந்தவன் குத்தாமல் வெட்டாமல், குனியாமல், வளையாமல், நகத்தில் அழுக்குப் படாமல், மார்பிலே சந்தனமும் நெஞ்சிலே மமதையும் வாழ்விலே வளமும், பிறர் வாழ்வுக்கு வேதாந்தப் பரிகாரம் கூறும் வித்தையும் கொண்டு பிழைத்திடவும், கட்டை வெட்டியும், மலம் எடுப்போனும், பாடுபடுபவனும் காடுமேடு திருத்தும் கஷ்டாளியும், பஞ்சையாய்ப் பராரியாய், இழிஜாதியாய், தாழ்த்தப்பட்டுக் கிடந்து உழலவுமான ஓர் காட்டு முறையை நாட்டிலே புகுத்திடும் நயவஞ்சகத்தை—நல்லறம் என்று கூறித்தான் வருகிறார்.

மக்கள் மதி துலங்கிடக் கண்டு தமது மந்தகாச வாழ்வு இனி மங்கிப்போகும் என்று மதத் தலைவர்களும் மடத் தலைவர்களும் அஞ்சிடுகின்றனர்—அவர்க

ளின் அச்சத்தைத் துடைத்துப் புத்தம்புது நம்பிக்கையை அவர்களுக்கே ஊட்டக்கூடிய வகையிலே, வர்ணாஸ்ரம ஆதரவுப் பிரசாரத்தை இடையருது செய்து வருபவர், இருபதாம் நூற்ருண்டின் இணையில்லா சாணக்கியன் என்ற பெயர் பெற்றுள்ள ஆச்சாரியார்.

நாடு நலிகிறது! எதனுல்? சமூகம் சிதைகிறது! ஏன்? மக்கள் வதைபடுகிருர்கள்! காரணம் யாது? மழை இல்லை! என்ன காரணம்? நோய்நொடி பரவுகிறது! யாது காரணத்தால்?—எதை வேண்டுமானுலும் கேளுங்கள்—யார் வேண்டுமானுலும் கேட்கட்டும், கேட்டவர்களுக் கெல்லாம் ஆச்சாரியார் அளிக்கும் ஒரே பதில், துணிந்து கூறும் பதில், "பழமையை இழந்தீர்கள், படாதபாடு படுகிறீர்கள், வர்ணாஸ்ரமத்தை நிலைகுலையச் செய்துவிட்டீர்கள், வாடுகிறீர்கள், சுகம் எங்கே, எங்கே என்று தேடுகிறீர்கள்! ஆகவே என் அருமைப் பிரஜைகாள்! வர்ணாஸ்ரமத்தை மீண்டும் கடைப்பிடியுங்கள், மலைபோல் வந்த துன்பம் பனிபோல் நீங்கும்" என்று கூறிக்கொண்டு தான் வருகிருர்.

அவர் வெளிநாட்டு வாணிப நிலை பற்றி விளக்கமுற்பட்டாலும், குடியாட்சிக்கும், கோனுட்சிக்கும், குடிக்கோனுட்சிக்கும் உள்ள மாறுபாடுகளை விளக்க முன்வந்தாலும், கூர்ந்து கவனியுங்கள், அவர் காட்டும் மேற்கோள், ஆதாரம், அரசியல் ஏடு, பொருளாதார விளக்க நூல். விஞ்ஞானக் கருத்திதழ் என்பவைகளிலிருந்து அல்ல, கடோபநிஷத், காயத்ரீ மந்த்ரம், கீதாவாக்யம், பராசரஸ்மிருதி, சங்கரரின் கீத கோவிந்தம், ஆழ்வார்களின் திருவாய்மொழி என்று பட்டியல் கிடைக்கும்!

ஆச்சாரியார் தம்மை, வெளிப்படையாகத் தான் காட்டிக் கொள்கிறார், நோக்கத்தைத் தெளிவும் துணிவும் ஒன்றை ஒன்று மிஞ்சிடும் வகையிலே அமைத்துத் தான் தெரிவிக்கிறார்.

இவ்வளவு பச்சையாக அவர் பேசிய பிறகும், அவருடைய நோக்கம் யாதோ, அவர் செய்யும் இந்தக் காரியத்துக்குக் காரணம் யாதோ என்று, குழம்பும், அன்பர்களை என்னென்பது—எந்த முகாமில் வைப்பது! நள்ளிரவிலே உள்ளே நுழைந்து கத்தியைக் காட்டிடும் கள்ளனைக் கண்டு, களவாடத்தான் வந்தானோ, அல்லது கத்தி வியாபாரம் செய்ய வந்துள்ளானோ, என்று சிந்தனையில் ஈடுபடும் சிலரை, என்னென்பது.

ஆச்சாரியார் ஆயிரம் முறை கூறிவிட்டார் நான் வர்ணஸ்ரமி, என் நோக்கம் மங்கி மடியும் வர்ணஸ்ரமத்துக்குப் புத்துயிர் ஊட்டி புது மெருகிட்டு, அரியாசனம் ஏற்றுவதுதான், நாடு, வர்ணஸ்ரமக் காடாகத்தான் இருந்து தீரவேண்டும், சமூகம், சமத்துவம் பேசிக் கொண்டும் ஒன்றே குலம் என்று கூறியும் இருத்தல் கூடாது—பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக, மனுமாந்தாதா காலமுதற்கொண்டு நால் வகைச் சாதியாய், பார்ப்பனர் மற்ற மூவர்க்கும் ஆசானாய், எஜமானாய், பாடுபடாத வாழ்வினனாய் வாழவும், சூத்ரன் கூலியாய், அடிமையாய், தாசனாய் இருக்கவுமான, முறைதான் மீண்டும் வந்தாக வேண்டும்.

சர். ராமசாமி முதலியாரா!—எவ்வளவு ஆணவம் !! சர். லட்சுமணசாமியா ! எவ்வளவு பெரிய இடம்! தேசிகரா ! சதசில் இடம் இவருக்கா ! என்று கூறுமற் கூறி வரும் குல்லூகபட்டர், இந்த ஆச்சாரியார் என்பதை

முதலிலே உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லை. இல்லை, என்று வாதிட வருபவர் தக்க சன்மானம் பெறக்கூடும், ஆனல், காரணம் காட்ட இயலாது.

ஆச்சாரியார் ஓர் வர்ணாஸ்ரமி—மீண்டும் இந்த நாட்டை ஆரிய சேவாபீடமாக்கித் தீரவேண்டும் என்ற எண்ணத்தை வெறி அளவுக்குக் கொண்டுவிட்டவர்—மீண்டும் இந்த நாட்டிலே, பல்லாயிரம் பிளவுகளும், மூதுகெலும்பற்ற மக்கள், அறிவுக்கணக்கற்ற அடிமைகள், நிரம்பிய நாடாக வேண்டும், சூது மதியினர் அமைத்த சுரண்டல் பொறி மீண்டும், மும்முரமாகச் சுழல வேண்டும், கண் மூடுமுன் அந்தக் காட்சியைக் காண வேண்டும், என்று துடியாய்த் துடிக்கும் சனதனி!

அவர், இந்த குணவான், எனில், அவர் தரும் உபதேசமாகட்டும், புகுத்தும் திட்டமாகட்டும், காட்டும் பாதையாகட்டும், நாட்டுப்பெருங்குடி மக்களை வாழ வைக்கவா செய்யும்!

சமரசத்தை, சமத்துவத்தை, சமதர்மத்தை மலரவா வைக்கும், சுரண்டலற்ற சூதுமதியற்ற, பேதமற்ற பேதமையற்ற சமூக வாழ்வைக் காணவா வைக்கும்!

ஆல்கபோன் மேற்பார்வையிலா அலிகார் பூட்டுக் கம்பெனி வளரும்! மலான் மேற்பார்வையிலா நிறபேத ஒழிப்புக் கூடம், வெற்றி காட்டும்! சங்கு பிடிப் போனிடமா குழல் கொடுத்து, குளிர் கீதம் கேட்க விழைவது! யானையையா கரும்புத் தோட்டத்தில் காவலுக்கு வைப்பது! ஆச்சாரியாரா ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயரிய தத்துவ திட்டத்துடன் வாழ்ந்த திராவிடத்துக்கு, வழி காட்டி! எண்ணவே,

நெஞ்சு வலி கொள்ளுமே! ஏற்பட்டுவிட்டால், திரா விடம். தேய்விடந்தானே!

மக்கள் வாழ வேண்டுமென்ற மாண்புள்ள நோக்கம் கொண்டோரே! பெருங்குடி மக்களை, உரிமை வாழ்வு வாழச் செய்வதுதான் அறம், அதுவேதான் அறிவுடமை என்ற பெருநோக்கம் கொண்டோரே! உலகெலாம் முன்னேறிய இக்காலையும் இந்நாடு மட்டும், சேரி வாழ் பாதி மனிதர்களும், சந்தனச் சேறு நிரம்பிய மார்பினரும், கொண்டதோர் விசித்திரக் காட்சிச் சாலையாக இருப்பானேன்.

இந்த வேதனையைத் துடைப்போம், வீரப் போர் புரிவோம், விடுதலைப் படை அமைப்போம், என்று வீறுகொண் டெழுந்துள்ள வீரர்காள்! விவேகிகளே! நெஞ்சிலே கைவைத்து, நேர்மையில் நாட்டம் வைத்து, உள்ளதை மறைக்காது, ஊறுநேரிடுமோ என்று அஞ்சாது கூறுமின், ஆச்சாரியாரின் பழமைப் பித்தம், வர்ணாஸ்ரம வெறி, சனாதனச் சாகசம், நாட்டை வாழவா வைக்கும்!!

பெருமூச்சுதான் பதிலா! பதில், வேறு வகையிலே தரவும் வகையற்றுப் போனோமா! அஞ்சி வாழும் ஆமைகளா நாம்! கெஞ்சிப் பிழைக்கும் கழைக் கூத்தரா! திரு இடத்தவர்—தீரம் மிகுந்தவர்!

நம்மை நயவஞ்சகப் .படுகுழியாம் வர்ணாஸ்ரமத்தில் தள்ளிட நடக்கும் மாபெரும் சதிக்கு 'மூல புருஷர்' இந்த ஆச்சாரியார். அவர் இன்று ஆளவந்தாரும் ஆகிவிட்டார், இதை விட ஆபத்து வேறு என்ன இருக்க முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்—ஏக்கம் நீக்கி, ஏற்றெடுத்துப் பாருங்கள், முறையா, அவர் நோக்கம்,

சரியா அவர் காட்டும் மார்க்கம், அடிமைப் படுகுழிதானு, நமக்கெல்லாம் வாழ்விடம், எண்ணிப் பாருங்கள்—நன்ருக எண்ணிப் பாருங்கள்.

இனி வர்ணுஸ்ரமத்தைப் புகுத்தியாக வேண்டும் என்ருல், என்னென்ன செய்ய வேண்டுமோ, எப்படிப் பேசவேண்டுமோ அதனை ஆச்சாரியார் செம்மையாகச் செய்து வருகிருர்.

வர்ணுஸ்ரமம் நிலைக்கவும், புத்துயிர் பெற்று வளரவும் வேண்டுமானுல்,

கல்வி பெருகக்கூடாது.

அதிலும் குறிப்பாக பின்னணி வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் கல்வி வளரக்கூடாது.

கல்வி அறிவு ஒரு சிறிது ஒப்புக்குப் பெற்ருலும், அவர்கள் அதனைக் கொண்டு தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளக்கூடிய தகுதியோ, திறமையோ, வசதியோ பெறக்கூடாது.

பொதுவாகவே, அளிக்கப்படும் கல்வியின் போக்கு சமரசம், சமத்துவம், உரிமை போன்ற எண்ணங்களை ஊட்டுவதாக இருத்தல் ஆகவே ஆகாது. மாருக, ஜாதி, மதம், முன்வினை போன்ற கற்பனைக் கட்டுப்பாடுகளை மனதிலே அழியாதிருக்கச் செய்வதாக அமைதல் வேண்டும். சுருக்கமாகக் கூறுவதானுல் எதோ இரண்டெழுத்து படித்துக் கொள்ளலாம். ஆனுல் ஏன் என்று கேட்கும் போக்கோ, நீ யார்? என்று கேட்கும் போக்கோ மனதிலே எழவிடக்கூடிய வகையான கல்வித்திட்டம் கூடாது.

வர்ணுஸ்ரமக் கல்வி முறை இதுபோன்றுதா னிருக்கும்.

ஆண்டையிடம் அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்வதே தனக்கு ஆண்டவன் விதித்துள்ள கட்டளை, என்று, 'சேவா உணர்ச்சி' பெற வேண்டும், பாட்டாளி வகுப்பினர், வர்ணாஸ்ரமக் கல்வி மூலம்.

பயல், மாடாய் உழைக்கிறான், நாய் போல் நன்றி உள்ளவனாக இருக்கிறான், அவன் மிகவும் நல்லவன்—கொடுத்ததைப் பெற்றுக் கொள்கிறான், குறை கூறான், அடித்தாலும் அழமாட்டான், அ ப் பா வி, என்று ஆண்டை பாராட்டத்தக்க விதமான 'பண்பு' வளர வேண்டும், நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் பாட்டாளி வகுப்பினருக்கு—வர்ணாஸ்ரமக் கல்வித்திட்டத்தின் தன்மை இது.

அவர் வர்ணாஸ்ரமத்தைப் புகுத்த விரும்புகிறார் — அதை வெளிப்படையாகவும் கூறுகிறார்.

வர்ணாஸ்ரமம் வளர வேண்டுமானால், மேலே குறிப்பிட்ட தன்மையில் கல்வி முறை இருந்தாக வேண்டும்.

அதே முறையிலேதான் ஆச்சாரியார் புதியகல்வித் திட்டத்தைத் தருகிறார்.

இன்று உள்ள ஆரம்பக் கல்வித் திட்டம் கவைக்கு உதவாதது என்று மக்களும் கல்வியாளர்களும் பெருங் கிளர்ச்சி செய்து ஆச்சாரியார் இந்தப் புதிய முறையை வகுத்தாரா! அதுதான் இல்லை! பொதுமக்கள் கேட்கவில்லை, கல்வித்துறையினர் எதிர்பார்க்கவில்லை. ஆச்சாரியாராகத்தான் முன் வந்து பிடி சாபம்! என்கிறார்.

ஆரம்பக் கல்வித் திட்டம் பற்றி பொதுவாக இருந்துவரும் குறைபாடு, போதுமான அளவினதாக

அமையவில்லை, என்பதேயன்றி முறையிலே இத்தகு திருத்தம் தேவை என்பது அல்ல.

தற்குறித்தனமும் தன்னரசும் ஒருசேர இருத்தல் தோகை மயிலாளுக்குத் தொழு நோய் இருத்தல் போன்றதாகும்—எனவே, விடுதலை பெற்ற நாட்டிலே விரைவிலே தற்குறித்தனம் போக்கப்பட்டாக வேண்டும். உயர்தர படிப்புக்காகச் செலவிடுவதைச் சற்று குறைத்துக் கொண்டேனும், ஆரம்பக் கல்விக்குப் பணம் மேலும் அதிகமாகச் செலவிட வேண்டும். குடியாட்சி குறையற்ற ஆட்சியாக இருக்க வேண்டுமாயின், கல்வி அறிவில்லாதார் இல்லாதிருக்க வேண்டும் — என்றே இதுவரை கல்வி சம்பந்தமாகப்பேசினோர் கூறினர்.

100-க்கு 14 பேர் மட்டுமே கல்வி பெறுகின்றனர், 'கலைமகள்' கடாட்சம் பெற்றுள்ள இந்தப் பண்டைப் பெரும் நாட்டில்! இந்தக் கேவலம் நீக்கப்பட வேண்டும் —ஆள்வோர் அரணுக்கும் அகழிக்கும், ஆஸ்தான அலங்காரத்துக்கும் ஆள் அம்பு பரிவாரத்துக்கும் செலவிடும் தொகையைக் குறைத்துக்கொண்டு, எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்ற முதுமொழிக்கேற்ப, அனைவரின் கண்களையும் திறந்து வைக்க வேண்டும், கல்வி மூலம் - என்று பலரும் வற்புறுத்தினர்—அரசியல் தலைவர்கள் வாக்களித்தனர் — வெளிநாட்டினரும் வேண்டிக் கொண்டனர் — மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம், இந்தக் குறைபாடு களைந்திட அல்ல — கல்வி தேவை என்று

கேட்கும் போக்கையே களைந்தெறியக் கூடிய கொடிய திட்டம்.

"மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழித் திருநாளா" என்று கேட்டார் தீட்சிதர். ஆச்சாரியார், "ஆடை வெளுக்கும் அன்பா! உனக்கேன் அ, ஆ, இ, ஈ, உ, ஊ!" என்று பாடுகிறார்.

நன்றாக வெளுக்கக் கற்றுக்கொள், குறித்த காலத்தில் வெளுத்துக் கொடு, ஆடை கிழியாமல் வெளுத்துக் கொடு, உன்னை நீ உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற சுயநலம் கொள்ளாதே, உன்னை உன் பெயரிட்டு, வண்ணான் என்று அழைத்துக் கொள்ள வெட்கப்படாதே, அது உன் குலப்பெயர் — குலப் பெயரையும் விட்டு விடாதே, குலத் தொழிலையும் விட்டுவிடாதே—என்று கூச்சமின்றி, அச்சமுமின்றி சலவையாளர் மாநாட்டிலேயே பேசிய சனாதனி புதிய ஆரம்பக் கல்வித்திட்டத்தை சனாதன வளர்ச்சிக்கன்றி வேறெதற்காகப் புகுத்த எண்ணுவார்.

கல்வித் திட்டத்திலே புது முறைகள் காண விழைவோர் பலருண்டு — பல புது முறைகளும் தீட்டிக்காட்டப்பட்டதுண்டு, சில நடத்திக் காட்டப்பட்டும் வருகிறது.

அவை யாவும், கல்வி முறையிலே எத்தகைய மாற்றம் உண்டாக்கினால், கல்வியினால் ஆன பயனை மக்கள் முழுவதும் பெறமுடியும் என்ற நோக்கத்துடன் — தாய் தன் கன்றின் உடல் மீதுள்ள அரிப்பையும், அழுக்கையும் போக்க நாவினால் தடவித் தருவதற்கும், வெட்டு முன்னம் பசுவையும், கன்றையும் கரத்தால் தடவிப் பார்க்கும் கசாப்புக் கடைக்காரனின், தடவுதலுக்கும்

எவ்வளவு வித்யாசம் உண்டோ, அவ்வளவு உண்டு பிறர் இதுவரை கூறிய, கல்விமுறை திருத்தத் திட்டங்களுக்கும் ஆச்சாரியார் புகுத்தும் திட்டத்துக்கும்.

பிறர் மக்களை முற்போக்கினராக்க, குடியாட்சிப் பொறுப்பை வகிக்கத்தக்க அறிவாற்றல் பெற்றவர்களாக்க உரிமை வாழ்க்கை நடத்தும் உளத்தினராகச் செய்வதற்கு கல்வித் துறையிலே எத்தகைய மாறுதல் காண வேண்டும் என்ற நோக்கம் கொண்டு கருத்துரை வழங்கினர்.

ஆச்சாரியாரே, சனாதனத்தைச் சுமக்கத்தக்க தாசர் சமூகத்தை உருவாக்கவும், வர்ணாஸ்ரமத்தை உதறித் தள்ளும் புத்துணர்ச்சியைப் பொசுக்கவும் வல்ல, கல்வித் திட்டம் எது என்று ஆராய்ந்து, புதுமுறை காணுகிறார்.

இந்த அடிப்படை வித்யாசத்தை மறத்தலாகாது.

கல்வித் துறையிலே இவர், நிபுணரல்ல—அங்ஙனம் அவர் கூறிக்கொள்ளவுமில்லை — அம்மட்டோ! கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து பேசியும் இந்தத் திட்டம் தரவில்லை — அதுமட்டுமல்ல! அவர்களின் எதிர்ப்பை ஒரு பொருட்டாக மதியேன், என்று இறுமாப்புடன் கூறவும் செய்கிறார். ஏன்? அவர் புகுத்துவது கல்வி முறையிலே புதிய திட்டம் அல்ல—அந்தப் பெயரால் அவர் புகுத்த எண்ணுவது, வர்ணாஸ்ரமத்தை — அக்ரகார ஆதிக்கத்தை — ஆரியத்தை — சந்தேகம் வேண்டாம்.

இதைக் கருதியேதான் அவர், இந்தப் பிரச்னை கல்வி சம்பந்தப்பட்டது அல்ல, மக்கள் சம்பந்தமான விவகாரம் என்று கூறினர்.

அவர் மாற்றுவது கல்வித் திட்டத்தை அல்ல. அப்பெயரிட்டு, முற்போக்கை முறியடித்து சமூக அமைப்பை மாற்றி அமைத்து வர்ணாஸ்ரமக் கொடுமையை உண்டாக்க உறுதி பூண்டு விட்டார்.

குலத்தொழிலைக் கற்றுக்கொள்ளட்டும் என்கிறார் —கூர்ந்து கவனியுங்கள்—ஏதேனும் தொழில் அல்ல!

ஏன் இவ்வளவு குறிப்புடன் குலத்தொழிலை வற்புறுத்துகிறார் — குலத்துக்கோர் தொழில் என்ற திட்டம் வர்ணாஸ்ரமத்தின் அடிப்படை. அந்த அடிப்படை தகர்ந்துபோய்விட்டது — காலத்தின் தாக்குதலாலும், நல்லறிவாளர்களின் பணியினாலும் — பகுத்தறிவுக் கணைகளினாலும்.

ஆச்சாரியார் அந்த அடிப்படையைப் பழுது பார்த்து, பலப்படுத்த விரும்புகிறார். இதுதான் அவருடைய நோக்கம். மிகத் துணிவுடன் தீட்டப்பட்ட தீய நோக்கம்.''

ஆச்சாரியார் பழமை விரும்பி — வர்ணாஸ்ரமி— எனவேதான் குலதர்மத்தை நிலைநாட்டும் திட்டத்தை திணித்திருக்கிறார் என்பதற்கான — அறிஞர் அண்ணா அவர்களின் மேலே கண்ட விளக்கத்தைவிட வேறென்ன வேண்டும்?

நாட்டின் நன்மை கருதி பலரும் கண்டித்த இத்தீய திட்டத்தை தி. மு. க. அரக்கோணம் பொதுக்குழுவில் தீர்மானித்தபடி, கடந்த ஜூன் மாதம் 21-ம் தேதி நாடெங்கும் பொதுக்கூட்டங்கள் கூட்டி அதனால் விளையும் கேடுகளை மக்களிடம் விளக்கி, ஆளவந்தாருக்கு எடுத்துக்காட்டியது.

பெற்றோர்களிடமிருந்து, இத்திட்டத்தை எதிர்க்கிறோம் என்பதற்கான கையொப்பங்களை வாங்கி சென்னை அரசியலாருக்கு அனுப்பி வைத்தது. ஆட்சியாளர் கவனிக்கவில்லை.

அடுத்த கட்டம் என்ன என்று அறிஞர் அண்ணு அவர்கள் கூறியபடி—ஜுலை 8-ந்தேதியன்று தி.மு.க. ஆதரவு பெற்று கடந்த பொதுத் தேர்தலிலே வெற்றி பெற்ற சட்டசபை உறுப்பினர்களை ஊர்வலமாகச் சென்று, இக்கல்வித்திட்டத்தைக் கண்டித்து சட்ட சபையில் போராட வேண்டுமென்ற வேண்டுகோள் 'ஓலையை'க் கொடுத்து முறையிட்டுக்கொண்டது.

தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களைக் கண்டு, தங்களது முறையீட்டைத் தெரிவித்து, சட்டசபையிலே வாதாடவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காகப் பல ஊர்களிலே ஊர்வலங்கள் நடத்தினர்.

அதே விதமாக சென்னையிலும் விருதை வீரர் தோழர் ஆசைத்தம்பி அவர்களது தலைமையிலே செல்லவிருந்த ஊர்வலத்திற்கு ஆச்சாரியார் சர்க்கார் அனுமதி தர மறுத்துவிட்டது!

தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்கள் பிரதிநிதியைக் காண மக்கள் அமைதியான முறையிலே கூடிச் சென்று முறையிட்டுக்கொள்ள இந்த அரசாங்கம் அனுமதி மறுத்துவிட்டது.

அதுமட்டுமா? அனுமதியை அமைதியான முறையிலே மீறி ஊர்வலம் நடத்திய விருதை வீரர் தோழர் ஆசைத்தம்பி, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர்

தோழர் கண்ணபிரான், தோழியர் அலமேலு அப்பாதுரை, மற்றும் ஐம்பத்து நான்கு தோழர்களை, ஆகமொத்தம் 57 தோழர்களை ஜுலை 8-ந்தேதி கைது செய்து சிறைக்கூடத்திலே அடைத்துவிட்டது.

அதற்கு மறுநாள் ஜுலை 9-ல் சென்னை சைதாப் பேட்டையிலும் தோழர் அண்ணுமலை முதலிய பத்து தோழர்கள் இதே காரணத்திற்காகக் கைது செய்யப் பட்டு சிறையிலே இருக்கின்றனர்.

என்ன இதன் பொருள்? அமைதியான முறை யிலே கூட, மக்கள் தமது எண்ணத்தை எடுத்துக்கூற, காட்ட தடையா? அனுமதி மறுப்பா? மீறினுல் சிறை வாசமா? ஜனநாயகம் என்பது எங்கே! எங்கே! என்று தேடிப் பார்த்தால்கூட கிடைக்காதா, இந்த ஆட்சி யாளர்களிடம்?

ஊர்வலமாகச் செல்ல முயன்ற தோழர்களை ஏன் தடுக்கவேண்டும்? எதற்காக அனுமதி மறுக்கப்பட வேண்டும்?

அவர்கள் எதற்காகச் சென்றனர்? ஆட்சியைக் கலைத்திடும் பயங்கரவாதிகளல்லவே! அவர்கள் முறை யிட, தங்கள் குறைகளைத் தங்கள் பிரதிநிதியிடம் எடுத் துக்கூறி அதற்கான பரிகாரம் தேட, அமைதியான முறையிலே கூடிச் சென்றதைத் தவிர, ஆட்சியாள ருக்கு எதிரான சதிக்கூட்டமா அது?

மக்கள், மக்கள் பிரதிநிதியைக் காணச் செல்வதை தடுத்து நிறுத்தி—அந்த மக்களையும் கைது செய்வது எந்த நீதிக்குப் பொருந்தும்?

அமைதியாக, கட்டுப்பாடாக, கண்ணியமாக மக்கள் தமது திட்டத்தை எதிர்ப்பதைக்கூட ஆச்சாரியார் விரும்பவில்லையே?

இது மனு, மாந்தாதா காலமல்லவே, மக்கள் வாய் மூடி மௌனிகளாய்க் கிடக்க.

தமக்குப் பிடிக்காத ஒரு கல்வி முறையை ஒரு தனி நபர்—தமது விருப்பத்திற்காகத் திணித்திடும் திருவிளையாடலைக் கண்டு மக்கள் மனம்விட்டு, தமது கண்டனக் குரலை எழுப்புவது கூடாதா?

ஏன் இந்த தகாத போக்கை ஆச்சாரியார் மேற்கொள்ளவேண்டும்?

ஆரியப் பித்து அவரைப் பிடித்து உலுக்குகிறது! வர்ணாஸ்ரமம் அவரது உள்ளத்திலே ஊறிக்கிடக்கிறது. குலதர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற கோணல் புத்தி தலைக்கேறித் தாண்டவமாடுகிறது! ஜாதிக்கட்டுப்பாடு உண்டாக்கப்பட வேண்டுமென்ற கட்டுமீறிய பேராசைப் பேய் அவரைப் பிடித்தாட்டிப் படாத பாடு படுத்துகிறது!

எனவேதான் அந்த வர்ணாஸ்ரமி—பழமைவிரும்பி தனது திட்டத்தை எதிர்த்து நன்கு அலசி, வெளிப்படையாக மக்களிடையே நல்ல விளக்கம் தரும் மக்கள் சக்தி நிறைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களைத் தடுத்து நிறுத்தி, சிறையிட்டு விட்டார் போலும்.

இதற்கடுத்தபடி சென்னையிலே கூடிய தி. மு. க. இரண்டாவது மாநாட்டிலே இக்கல்வித் திட்டத்தின்

கேடுகளை நன்கு விளக்கி, பலர் பேசினர். தீர்மானம் செய்தனர்.

ஜூலை 14-ந் தேதியன்று காலை ஆச்சாரியார் வீட்டுமுன் அமைதியான முறையிலே மறியல் செய்து, முதன்மந்திரியாரை இத்திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொள்வதென, தி. மு. க. முடிவு செய்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஜூலை 14-ம் தேதி யன்று கல்வித் திட்டப் போராட்டம் தொடங்க முடிவு செய்து, முதல் தளபதியாக, ஈரோட்டுச் சிங்கம் ஈ. வி. கே. சம்பத் அவர்களது தலைமையிலே ஐம்பது தொண்டர்கள் செல்வதென ஏற்பாடாகிவிட்டது.

ஜூலை 13-ந் தேதி மாலை அறிஞர் அண்ணா அவர்கள் தி. மு. க. செயற்குழுவைக் கூட்டி கல்வித் திட்டம், நான்சென்ஸ் எதிர்ப்புக் கிளர்ச்சி, டால்மியாபுரம் போர் ஆகியவை பற்றிக் கூடிக் கலந்து முடிவு செய்தனர்.

இந்த நேரத்தில் போலீசார் புகுந்துதிராவிடத்தின் செல்வம் அறிஞர் அண்ணா அவர்களையும், அவரது தம்பி மார்களான தோழர்கள், இரா. நெடுஞ்செழியன், ஈ. வி.கே. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோரைக் கைது செய்து சிறையிலே பூட்டி விட்டனர்.

அறிஞர்—திராவிடத்தின் செல்வம் — நமது வழி காட்டி—கொள்கைக் கருவூலம் நம்மிடமிருந்து பிரிக்கப் பட்டுவிட்டார், ஆச்சாரியாரால்.

கொடுமை! கொடுமை! மனித உரிமையைப் பறித் திடும் கோரக் கொடுமை தலைவிரித்தாடத் தொடங்கி விட்டதே!

அமைதியான ஊர்வலத்திற்குத் தடை; கைது; சிறைவாசம்! அமைதியான அறப்போர் நடத்தக் கூடி யிருந்த அண்ணுவுக்கும், அவரது தம்பிமார்களுக்கும் சிறைவாசம்.

இதயம் தாங்கமுடியாது கொந்தளிக்கிறது என்ரு லும் அண்ணுவின் 'அறப்போர்' அறிவுரை மக்களது கொந்தளிக்கும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருக் கிறது.

ஆச்சாரியார் தமது தர்பாரைத் தொடங்கிவிட்டார்! சிறைக் கதவுகளைத் திறந்து, தியாகத் தீயில் குதித்திடும் திராவிட வீரர்களைத் தள்ளிப் பூட்டி வருகிருர் தினந் தினம்.

ஜுலை 14-ந் தேதி ஆச்சாரியார் வீட்டுமுன் மறியல் செய்யப் புறப்பட்ட தோழர்களும், அதனைத் தலைமை தாங்கி நடத்திய தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களும் கைது செய்யப்பட்டுவிட்டார்.

அன்று காலையில் சட்டசபைமுன் மூவர் மூவராக, சர்க்காரின் 144 தடை உத்தரவை மீருது 'அறப்போர்' நடத்தச் சென்ற திராவிட கழகத் தோழர்கள் வ. வீராசாமி எம்.பி. அவர்களையும், விடுதலை ஆசிரியர் தோழர் எஸ். குருசாமி' முதலியவர்களையும் பிடித்துச் சிறையிட்டு விட்டனர்.

அன்று மாலை அடக்கு முறையைக் கண்டித்து வண்ணையம்பதியில் கூட்டம் நடத்த முயன்றவர் நால்வர், ஆர். பி. கனி முதலியோர் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டனர்.

அண்ணு முதலியோர் கைதானதும் ஆர்வ மிகுதியால், வீதிகளிலே செய்தியை எழுதிய தோழர்களும் கைதாகி சிறை புகுந்தனர்.

இரண்டாம் நாள் அறப்போரிலும் தலைமை தாங்கிய என். எஸ். இளங்கோ முதலியவர்கள் சிறைக் கோட்டம் புகுந்தனர்.

ஆச்சாரியாரின் அடக்கு முறையை எதிர்த்து சட்ட சபையிலே கடும் எதிர்ப்புக் குரல் கிளம்பி முழங்குகின்றன.

இதற்கிடையில் தமிழர்களை 'நான்சென்ஸ்' என்றும், 'முட்டாள்கள் என்றும் கூறிய பண்டித நேருவின் துடுக்கான பேச்சைக் கண்டித்து ஜுலை 15-ல் தமிழக மெங்கும் ரயில்கள் நிறுத்தப்பட்டன.

இந்தப் போராட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர் கைதாகி உள்ளனர். தூத்துக்குடிக் கருகில் நால்வர் போலீசாரின் துப்பாக்கி வேட்டுக்கு இரையாகி யுள்ளனர், பலர் படுகாய முற்று வாடி வதங்கிக் கிடக்கின்றனர்.

இடையே, ஜுலை 15-ல் டால்மியாபுரம் அறப்போர் கலைஞர் கருணநிதி தலைமையிலே துவக்கப்பட்டு அவரும் மற்றவரும் கைதாகியுள்ளனர்.

டால்மியா புரத்திலும் போலிசார் சுட்டனர். ஏழு பேர் மாண்டனர். பலர் படுகாயப்பட்டுக் கிடக்கின்றனர்.

நாடெங்கும் வேண்டுகோள் விடுத்தனர் கடந்த ஒரு மாத காலமாக, புதிய கல்வித் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று, ஆச்சாரியாருக்கு!

பல மாவட்ட ஆட்சி மன்றங்கள், பஞ்சாயத்துகள், கல்விக் கழகங்கள், ஆசிரியர் கழகங்கள் - மாநாடுகள் எல்லாம் தமது எதிர்ப்பைத் தெரிவித்தும் ஆச்சாரியார் தமது போக்கை மாற்றிக் கொள்ளாமல்—எந்த பதிலும் பேசாமல் — கூருமல் — தனது தர்பாரைத் தொடங்கிவிட்டார்.

தமிழனது வீரம் மங்கிவிடவில்லை-தமிழனது இரத்தம் கொதிப்பேறித் தான் இருக்கிறது. தமிழரது பேச்சு, மூச்சு அனைத்திலுமே இன்று கனல் தெறிக்கிறது, கடுமை தாண்டவமாடுகிறது.

தமிழன் தன்னைத் தாழ்த்திடும் தீய திட்டத்தை அறப்போர் தொடுத்து வெற்றிகாண விரும்புகிருன் என்பதால் ஆச்சாரியார் தமது துப்பாக்கிகளையும், அதிகாரத்தின் நீண்ட கைகளையும், சிறைக் கம்பிகளின் உறுதியையுமே நம்பி, தமிழரது மானத்தைப் பறிக்கக் குலதர்மத்தை நிலைநிறுத்தி விடலாம், குலதர்மக் கல்வி திட்டத்தின் மூலம் என்று பகற்கனவு காண்கிருர்!

நேர்மையான முறையிலே வந்ததல்ல இந்த சட்டம்—திட்டம்.

கொல்லைப் புறமாகப் புகுந்து பங்காளிச் சண்டை போன்று, தமக்குள்ளே காங்கிரஸ் கட்சியினர் சண்டையிட்டுக் கொண்ட நேரத்திலே-சூழ் நிலையிலே சந்தர்ப்பத்தின் சாகசத்தால்—சாணக்கியர் எனப்படும் ஆச்சாரியார் ஆட்சிப் பீடமேறியதைப் போலவே, சட்டசபையில் வைக்கப்படாமல், தனி மனிதர் ஆச்சாரியாரின் மனப்போக்குப்படி, அவரது அதிகார ஆணவத்தின்படி, நுழைக்கப்பட்டது இக்கல்வித் திட்டம்.

குலத்தை நிலைநிறுத்த இந்தக் குல்லூகபட்டர் கொண்டுவரும் இத்திட்டத்தில் சூது நிறைந்திருக்கிறது.

வர்ணாஸ்ரமம் என்ற சூதுப்பொறி — சுரண்டல் யந்திரம் ஆரிய முறை — அநாகரிகத் திட்டம், தொழிற் கல்வி என்ற போர்வையில், குள்ளநரித் தந்திர முறையில் மூக்காடிட்டுக்கொண்டு வருகிறது.

தமிழரை — திராவிடரை — இனஎழுச்சி பெற்ற திராவிடரைத் தடுத்திட, தாழ்த்திட சுற்றுவழி தேடி ஆச்சாரியார் அலைவது போல, தமிழர்கள் இதனை மறை முகமாக எதிர்க்கவில்லை. நேர்முகமாகவே கண்டிக்கின்றனர்.

அதிகாரம் — போலீஸ் பட்டாளம், சிறைச்சாலை, கிரிமினல் சட்டம் ஆகியவற்றின் துணைகொண்டு தாக்க வரும் ஆச்சாரியாரின் ஆரியக் கல்வி திட்டம் எதிர்க்கப் படுகிறது, சாமான்யவர்களால் சாதாரணமாக!

'அறப்போர்' வீரர்கள் எதைக்கொண்டு செல்கின்றனர் தம்முடன்?

பட்டாக்கத்தி கிடையாது, பளப்பளப்பான மெருகிட்ட பூண்களையுடைய குண்டாந்தடிகள் கிடையாது, துப்பாக்கியில்லை, அரிவாள் இல்லை—சம்மட்டி இல்லை.

கையிலே படைக்கருவிகள் ஏதுமின்றி வெறுங் கையுடன், வெள்ளை மனதுடன், தமிழரது மானத்தைக் கொள்ளை கொள்ளும் ஆரிய தர்மத்தை அஞ்சாது எதிர்த்திடும் ஆற்றலைத் தம்முடன் கொண்டு செல்கின்றனர்.

வீரம், விவேகம் — கட்டுப்பாடு — கண்ணியம் — தமது இனத்திற்காக எதையும் தாங்கும் இதயம் ஆகியவைகளைத் தம்முடன் அழைத்துப் போகின்றனர்.

தமிழ் மக்களது — நல்வாழ்வுக்காக இரத்தம் சிந்தப் போகும் அவர்கள் தமிழரது நல்லெண்ணத்தையும், நல்லாதரவையும், நல்லாசியையும் தம்முடன் கொண்டு செல்லுகின்றனர்.

அவர்களிடம் நீதி நிற்கிறது, நேர்மை குடிகொண்டிருக்கிறது, நியாயம் துணையாகிறது, இனப்பற்று இணைந்திருக்கிறது.

இத்தகைய அறப்போர்த்தொண்டர் நாள்தோறும் ஆச்சாரியாரின் ஆணவப் போக்கினைத் தடைசெய்து நிறுத்திட, அமைதியான, கண்ணியமான முறையிலே ஆச்சாரியார் வீட்டு வாயிலில் நின்று தமது முறையீட்டைக் கேளுங்கள் என்று போகிறார்கள், முன்கூட்டியே தெரிவித்துவிட்டு.

ஆச்சாரியாரோ, மூடு போட்ட மோட்டாரில், ஆயுதம் தாங்கிய போலீசார் படை சூழப் புறப்பட்டுப் போகிறார் சட்டசபைக்கு!

அவர் புறப்படுவதற்கு முன்பே, தம்மை நீதியின் பேரால், நேர்மையின் பேரால், நியாயத்தின் பேரால், மக்கள் உரிமையின் பேரால், மக்களின் குறைகளை, அவரிடம், அவர் முதன் மந்திரி என்ற காரணத்திற்காக, எடுத்துக்கூறி, விளக்கி 'வேண்டாம் இந்த வீணான திட்டம்' என்று கேட்பதற்காக கூடிவந்த 'அறப்போர்' வீரர்களை நடுவழியிலே நிறுத்தி போலீஸ்

லாரிகளில் ஏற்றிச் சிறைச்சாலைக்கு அனுப்பிட்டனர்-என்ற செய்தியைக் கேட்ட பின்னரே புறப்படுகிறார்!

மக்களைச் சந்திக்க—தமது உரிமைகளை, அறவழி கேட்கும் மக்களைக் கண்டு பேசிட ஆச்சாரியார் மறுக்கிறார் — கூறவில்லை வாயால் — ஆனால் அவரது அடக்கு முறைக் கொடுமை, தொண்டர்களைக் கைது செய்யும் போக்கு, சிறைத்தண்டனை தரும் தீர்ப்பு யாவும் இதைத்தானே தெரிவிக்கின்றன.

மக்களை மதியாத ஆச்சாரியாருக்குத் தமிழர்கள் தங்களது தீரத்தை தீர்மானத்தை — தெளிவான உறுதியைக் காண்பித்தாக வேண்டும்.

அறிஞர் அண்ணா கூறியபடி ஆயிரமாயிரம்தோழர்கள் அணி அணியாக, அறப்போர் முறையிலே கலந்து பணியாற்ற வேண்டும்.

குலத்தொழிலைப் புகுத்தி—குலதர்மத்தை நிலை நாட்டி—குற்றேவல் புரியும் கீழ் மக்களாகவே நமது சந்ததிகளைத் தயாரிக்கப் படுகுழி வெட்டி, மக்களது கழுத்துகளிலே கயிறு மாட்டிக் கீழே தள்ளி விட்டிருக்கிறார்!

படுகுழியிலிருந்து மேலேற அவசரப்பட்டோ, ஆத்திரப்பட்டோ, துடிதுடித்தோ, திடீரென்று கயிற்றைப் பிடித்து இழுத்து நம்மை நாமே கெடுத்துக்கொள்ளக் கூடாது. நமது குழந்தைகளின் கழுத்திலே மாட்டப்பட்ட சுருக்குகள் நம்மாலேயே இறுகி அவர்களது நெஞ்சை யிறுக்கிச் சாகடிக்கவும் கூடாது. அமைதியான போராட்டம்தான் நம்மை வாழ்விக்கும்—வளர்க்கும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மக்களை—நால் வகைச் சாதியினராய் ஏன்? நாலாயிரம் சாதியினராகப் பிரித்து வைத்து, அறியாதவராய்—படியாதவராய்—படித்தவன் கூறுவதே வேதம்—போதிப்பதே சட்டம்—திட்டம் காட்டும் பாதையே வாழ்வுப் பாதையென்றுவகுத்து மேல் ஜாதிக்காரர்கள் மக்களை ஏய்த்துப் பிழைத்து, ஆட்டிப்படைத்து ஆனந்த வாழ்வு வாழச்செய்தது எது? ஆரிய தர்மம் தானே? வர்ணாஸ்ரமம் என்ற பழமைப் பிடிப்பு தானே!

வர்ணாஸ்ரமத் திட்டம் அன்று ரிஷிகள்—முனிவர்கள்—மனு, மாந்தாதா கூறியவை என்று மக்களின் மேல் புகுத்தப்பட்டு மக்களிலே ஒரு பகுதியினர் படிக்கவும், வேதமோதவும்—படிக்கவிக்கவும் — பூதேவர்—பூசுரர் என்றெல்லாம் போற்றப் படவும், மற்ற பகுதியினர், பூதேவர் எனப்படும் மேற் குலத்தாருக்குத்தான் பணிந்து, தாசர்வேலை செய்திடவுமான குலத்தொழிலை இந்த நாட்டிலே நிலையிறுத்தியது என்பதை நாம் எப்படி மறக்கமுடியும்?

படிக்காத—படித்தால் பாவம்-பகவானுக்கு விரோதம், குலம் கெடும்—குலாச்சாரம் பாழாகும் என்றெல்லாம் பாவ, புண்ணியங்களின் பேரால் மக்களை பயமுறுத்தியும், மீறிப் படித்தால் தண்டித்தும், காதால் கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியும் நாவையறுத்தும் ஆரியம் மக்களின் பெரும் பகுதியினரைப் படியாது—படித்தவருக்கு—படிக்கும் உரிமையைப் பரம்பொருளிடமிருந்து பெற்றுப் பரம்பரை பாத்தியத்தை கொண்டாடியகூட்டம், கண் காணித்து வந்தது -- என்பதை யார்தான் மறுக்க முடியும்.

இந்த நீதிதானே மனுதர்மம்! மறுத்திடும் கூட்டம் எது? மறைத்திட முனைபவர் யார்? எவர் வரமுடியும் துணிவோடு, இல்லையென்று கூற? முடியாது.

இத்தீய சமுதாயப் படுகுழியில் வீழ்ந்து திக்கற்றுத் தவித்த காரணத்தால்தான் வண்டமிழ் நாடு—வளமார் திராவிடம், பூதேவர் காட்டிய வழி நின்று தமது அறிவைப் பெருக்கிடாது — குற்றேவல் புரியும் குல தர்மத்தைக் கடைப்பிடித்தனர்.

ஆங்கில ஆட்சி தோன்றி, அதனால் இத்தீதான பழம்பிடி கழன்று, கால வேகத்தை ஒட்டி, எதையும் படிக்கும் நிலைக்கு பழம் பெருங்குடிமக்களான தமிழர்கள் முன்னேறினர்.

குலம்—குலதர்மம்—குலத்தொழில் ஒன்று மனிதரைப் பிறப்பால் பிரித்து பேதப் படுத்தி—பிளவுண்டாக்கி—மேல்—கீழ் என்று பேசுவது—நடப்பது நல்லதல்ல தீமை. மனிதாபிமானத்திற்கே மகத்தான துரோகம் என்று உணர்ந்து அதனை விட்டொழிக்க முற்பட்டனர்.

இத்தகைய தீங்கான பழக்கத்தை—வழக்கத்தை ஊட்டி மக்களை மயக்கித் தன்னடிமையாக்கி வந்த கொள்கைகள்—கோட்பாடுகள், நூல்கள் யாவற்றையுமே அறிவுக்கண் கொண்டு ஆராய்ந்து பார்த்தனர்.

தகாத போதனை செய்யும் நூலா, தள்ளிவிடு! கேடு செய்யும் கோட்பாடா? கொள்கையா, தேவையில்லை என்று முன்னேற்றப் பாதையிலே பகுத்தறிவு கொண்டு வீரநடை போட்டனர் விழிந்தெழுந்த தமிழர்கள்—திராவிடர்கள்.

இத்தகைய விழிப்புணர்ச்சி—சனாதன தர்மத்திற்கு சவக்குழி தோண்டிவிட்டது—குலம்பேசி; குனியாது வளையாது குந்திக் குதிர்போல் பெருத்து வாழும் கூட்டம், ஓடி, ஆடி, வேலை செய்திடும் நிலைமையை உண்டாக்கி வருகிறது.

பிறப்பினால் சிறப்பு காட்டுவோர் இகழ்ச்சி மொழி புகல்வோர்—மனிதரில் மிகமிக மட்டரகங்கள்—பதர்கள்—மனிதத் தன்தமயற்ற காட்டு மிராண்டிகள்—சுய நலச் சூதாடிகள்—எத்தர்கள் என்று நாகரிக உலகம் நமக்கெல்லாம் எடுத்துக் காட்டிவிட்டது.

இக்குல முறையை, குலத்தொழிலை மீண்டும் தொழிற் கல்வி என்ற திரை போட்டுப் புகுத்திடும் ஆட்சியைக் கண்டித்து, கண்யமான அறப்போர் நடத்துவது குற்றமா?

ஆச்சாரியார் அறவழி நிற்பவரானால், மக்களின் மனதறிந்து நடக்கும் ஜனநாயகப் பண்பு படைத்தவரானால் மக்கள் குரலைக் கேட்டுக் கவனிக்க வேண்டுமென்று கருதியிருக்க வேண்டாமா?

கடந்த ஒரு மாதங்களாக இக் கல்வி திட்டத்தைக் கண்டித்து மக்கள் குரல் எழுப்பி வந்ததைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவில்லை. எந்தவித பதிலும் கூறவில்லை—திட்டத்தை மாற்றவில்லை !

கல்வி திட்டத்தை எதிர்த்து அறப்போர் நடத்துவோம் என்று கூறிய மக்கள் தலைவர்களைக் கண்டு—கூப்பிட்டுப் பேசினாரா? இல்லை !

விளக்கம் — வேண்டுகோள் - தீர்மானம் - ஊர்வலம் - இத்தனையும் நடந்த பின்னரே அலப்போர் தொடங்க திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது.

திடீரென்று ஆச்சாரியாரைப் போல, நினைத்தவுடன் களத்திலே குதித்துவிடவில்லை.

ஆர, அமர, யோசித்து, விளக்கத்திற்கு மேல் விளக்கங்கள் வேண்டுகோளுக்கு மேல் வேண்டுகோள்கள் விடுத்து, ஆளவந்தாரின் கவனத்தைக் கவர்ந்திட— அதன் மூலம் இத் தீங்கான திட்டம் கைவிடப்பட எல்லா அறமுறைகளையும் கையாண்டது.

இத்தயை அறப்போர் வீரர்களை, தலைவர்களைக் கைது செய்து, சிறையிடுகிறது. இதுவா அறம்? நீதி? நேர்மை?

நீதி கேட்கும் மக்கள் குரலைக் கேட்க மறுத்து நீதி மன்றத்திலே பிடித்து நிறுத்திக் கொடுந் தண்டனை தருகிறார், கோல் கொண்ட ஆச்சரியார்.

மக்களின் நிலை குலைக்கும் தீய திட்டத்தை விடுங்கள் என்று கேட்டால் கைது செய்கிறார் ஆச்சரியார்.

திராவிட மக்களே! நமக்கு இது மிகவும் நெருக்கடியான கட்டம். கடமை யுணர்ந்து காரிய மாற்ற வேண்டிய சூழ்நிலை வளர்ந்து விட்டது.

அறப்போர் அமைத்து அறிவுரை புகன்ற அறிஞர் அண்ணா நம்மிடம் இல்லை! களத் தலைமை பூண்ட அவரது தம்பிமார்கள் இல்லை.

அவர்களை யெல்லாம், குலதர்மத் திட்டம் தனது கோர வாய்திறந்து கௌவிக்கொண்டிருக்கிறது.

நமது வழிகாட்டிகளை வஞ்சக திட்டம் வலை வீசிப் பிடித்துச் சிறைக் கம்பிகளுக்கு அப்பால் தள்ளிப் பூட்டியைத்திருக்கிறது!

தளபதிகள் தினந்தினம் தமது போர் வீரர்களுடன் களம் நோக்கிச் சென்ற வண்ணமிருக்கின்றனர். கைதாகின்றனர்—காராகிரகத்தில் நுழைகின்றனர்.

திராவிட வீரர்களே! தீரர்களே! தீந்தமிழ்ச் செல்வங்களைத் தீய்த்திடும் திட்டத்தின் தீய திருவிளையாடல் தொடங்கிவிட்டது! என்ன செய்யப் போகிறீர்கள் என்னு திராவிடம் உங்களை எதிர் நோக்கியிருக்கின்றது.

நமது செல்வங்களின்—திருக்குழந்தைகளின் கண்களைக் குத்திக் குருடாக்கும் திட்டம் கோரத் தாண்டவமாடுகிறது! கொக்கரிக்கிறது!

நமது மழலைமொழிச் சிறார்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தி—அறிவுக் கண்களைப் பிய்த்துப் பிடுங்கி எறிந்திடும் திட்டம் அதோ! ஆச்சாரியாரின் அதிகார வெறியின் துணையோடு ஆணவத் திமிர்த் தாண்டவமாடிப் பவனி வருகிறது திராவிடத்தில்!

தீரத் திராவிடச் சந்ததிகள் திசைதப்பி, வர்ணாஸ்ரமப் படுகுழியில் தள்ளப்படுகின்றனர்!

சின்னஞ்சிறு சிட்டுக்கள்—சிங்கார உயிரோவியங்கள் குலத்தொழில் கற்கும் கோரத்தைக் காணுங்கள்—கொடுமை செய்ய கெடுமதி கொண்ட குலதர்மத் திட்டம் வகுத்திடும் வஞ்சக வலையைப் பாருங்கள்!

தமிழ் மகனைத் தீண்டவரும் நச்சுப் பாம்பு நமது மக்களின் உள்ளத்திலே, உணர்விலே தனது நச்சு நீரைப் பாய்ச்சுமுன் நாகத்தின் தலையை நசுக்கப் புறப்படுங்கள்! புறப்படுங்கள்!

அறிவுக்குத் தடைவிதித்து, அறியாமைச் சுடர் கொளுத்தி, ஆரிய தர்மத்தை நிலைத்திடச் செய்யும் சூதான திட்டம் அதோ—அதனை ஆதரித்திடும் ஆச்சாரி யாரின் அடிவருடிகள் அதோ! அதனை விடேன்' விடேன் எனக் கொக்கரித்துக் கொடுமை செய்யும் கோல்கொண்ட கோமான்—ஆச்சாரியார் அதோ!

உங்கள் கவனம் அங்கே திரும்பட்டும. தீய திட்டத் தின் திக்கு நோக்கித் திரும்புங்கள்—தூய தமிழ்ப் பண்பாட்டை காத்திட களம் புகுங்கள்!

காளையரே! கற்றோரே, பெற்றோரே, கல்வி கற்ற புலவர்களே! உங்களையெல்லாம் கண்மூடி மௌனிக ளாகக் கருதிக்கொண்டு அடக்குமுறை ஆர்ப்பாட்டத் தோடு பவனிவரும் ஆச்சாரியாரையும், அவரது கல்வித் திட்டத்தையும் கண்திறந்து பாருங்கள் — கண்டனக் குரல் கிளப்புங்கள்.

வீதியெங்கும் தமிழர் கூட்டம், ஊரெங்கும் தமிழர் முழக்கம், நாடு நகரெங்கும் தமிழர் முகாம், எத்திசை நோக்கினும் எதிர்ப்பு—எதிர்ப்பு—எதிர்ப்பு ஏற்படட்டும்!

திராவிடத்தின் மொழிக்கு வந்த கேட்டினைத் தடுக்க முனைந்த மக்களைக் கேலி செய்த ஆச்சாரியார், மீண்டும் நம்மை மதியாது, நம்மை மிதித்துத் துவைத்திட முனைகிறார்.

நமது எழுச்சி முரசொலி முழங்கட்டும்! தீரப் பண் பாடட்டும்! போர் முரசு கொட்டட்டும் மேலும், மேலும்!

தோழர்களே! தாய்மார்களே! தாயகம் தேம்பு கிறது, தனது குழந்தைகளின் கோரநிலை கண்டு! தேற்ற வாரீர்!

தன்மானத் தமிழர்காள்! தாயகம் தவிக்கிறது—தத்தளிக்கிறது—தனது திராவிடச் செல்வங்கள் சிறையிலே கிடப்பதைக் கண்டு—சிங்கத் தமிழர்களை சிறை மீட்கச் சேர்ந்து வாரீர்!

தாயகம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது, ஆச்சாரியாரின் கொலைகாரக் கல்விமுறை கண்டு! இரத்தம் சிந்தியேனும் தாயகத்தின் இரத்தக் கண்ணீர் துடைத்திட வாரீர்!

தாயகம் துடிக்கிறது, அடக்குமுறையின் அடி தாங்கமாட்டாது! அதனைத் தாங்கி தாயகத்தின் நிலை மாற்றிட வாரீர்!

தாயகம் குமுறுகிறது! தாயகம் கொந்தளிக்கிறது! தாயகம் குழம்பிக் கிடக்கிறது! தாயகம் தணலில் தள்ளப்படுகிறது! தாயகம் சேற்றிலே, சகதியிலே—வர்ணாஸ்ரமப் படுகுழியிலே அமிழ்த்தப்படுகிறது - கை கொடுத்துக் காப்பாற்ற வாரீர்!

தாயகத்தின் எதிர்கால சந்ததிகளின் வாழ்வு பறிக்கப்படுகிறது. பகுத்தறிவு பொசுக்கப் படுகிறது! கண்களிலே காய்ச்சிய இரும்புக் கம்பி கொண்டு குத்தப்படுவதுபோல, அறிவுக் கண்கள், குலதர்மக் கேட்டினல் கருகிப் பொசுங்கிப் போகின்றன!

தாயகம் அறைகூவி அழைக்கிறது! ஆண்மையோடு கேட்கிறது! தாழ்மையோடு தலைவணங்கிக் கூப்பிடுகிறது! தன்மானத்தின் பேரால் கட்டளையிடுகிறது! இனப்பற்றின் பேரால் எழுச்சி வேண்டும், விழிப்பு தேவை — என்று வேண்டுகிறது!

விழிப்புற்று, எழுச்சி பெற்ற திராவிடரே! வாருங்கள், வாருங்கள்! தாயகத்தின் துயர் நீக்குங்கள்!

கொலைகாரக் கல்விமுறை, அறிவை ஆற்றலை, ஆண்மையை, எதிர்கால ஏற்றத்திற்கான அறிவுக் கண்ணை அழித்திடும் கொடுமை களைய, கோரத்தாண்டவத்தை நிறுத்த, ஆணவப் போக்கினைக் கண்டித்திட ஆண்மையாளர்களே! அறிவுடையோரே, அறிவாளர்களே! தன்மானமிக்கோரே ஆதரவு தாரீர்!

வசதி படைத்தோர் களம் புகுங்கள்! கட்டுப்பாட்டுடன், கண்ணியத்துடன், அறப்போர் தொடுத்திடுங்கள்!

தீயவழி செல்லும், திருக்குலத்தானென்று கூறிக்கொள்ளும் ஆச்சாரியாரும் அறிந்து வெட்கித் தலை குனிந்திடும் அளவுக்கு தமிழர் பட்டாளம் பவனி வரட்டும், தமிழகத்தின் தலைநகர் நோக்கி!

ஆணவம் பிடித்து அக்கிரம வழி செல்லும் குறைமதி கொண்டோரும் குனிந்தத் தலை நிமிராத அளவுக்கு நாம் அறப்போர் தொடுப்போம் — வெல்வோம் — கொட்டுவோம் வெற்றி முரசு!

வாழ்க திராவிடம்!

வெல்க கல்வி திட்டப் போராட்டம்!!

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

அறிஞர் அண்ணாவின்

அரிய நூல்கள்

தீ பரவட்டும்	....	1	0
தேன் துளிகள்	....	1	0
புராண மதங்கள்	....	1	0
மறு மலர்ச்சி	...	1	0
குமாஸ்தாவின் பெண்	....	1	0
அறிஞர் அண்ணாதுரை(தொகுப்பு)		1	0
இதன் விலை ரூபாய் 3,000	....	0	12
தேவ லீலைகள்	....	0	8
நமது முழக்கம்	....	0	8
அண்ணாவின் உவமைகள்	....	0	8
வெற்றிமுரசு	....	1	0

கலைமன்றம்

சென்னை - 1.